719

# திராவிட நாடு

மலர்-6 இதழ்-49

23-5-48

JL
V211m N42;D
N48·6·49
88309

719

REGD. M. 4642

# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

| மலர் 6 | 23—5—48 | இதழ் 49 |
|---|---|---|

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS

## என்று போமோ!

—o—

[எஸ். வி. வி. இராமன்]

வீட்டினிற் பிள்ளையோடு வெதும்பிய மனையாள் தானும்
வாட்டிய பசியினால் ஓர் வகையுமற்றுச் சோர்ந்திருக்க,
காட்டினில் உழைத்து வந்து களைப்புடன் பெற்ற காசை
வாட்டமற்றோர் தம் வாழ்வுக்கு நல்குவதென்று போமோ!

காலையில் எழுந்துசென்று, களைப்புடன் இயந்திரத்தின்
சாலையில் உழைத்து, மீண்டும் சலிப்புடன் வீடு வந்து
ஆலைவாய்ப்பட்ட கோல்போல் அல்லலுற்றவனும் வாட,
வேலையே அறியா வீணர் வீறுகள் என்று போமோ!

இன்பத்தின் கண்ணை, நல்ல இயற்கையின் எழிலைப் பற்றும்
அன்பத்தின் திறவுகோலை ஆயகலை அழகின் வாழ்வை,
மன்பதைக்குற்ற எந்த மயக்கமும் தீர்க்கவல்ல
இன் தமிழ் நாகரிகத்தை, இகழுவதென்று போமோ!

*****
*பணிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட
மாதம் வருடம்
செப்பனிட்டு முடித்த
மாதம் வருடம்
ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்

### சர்க்கார் விடுமுறை நாட்கள்

4-ம் பக்கத் தொடர்ச்சி

அளிக்கும் நிலை பெற்றுள்ளதைப் பார்த்தபின்னரும், விஞ்ஞானத்தை மெய்ஞ்ஞானத்தின் துணைகொண்டு இழிக்க முயல்வது கேலிக்கூத்தே யாகும்.

எனவேதான், இன்றைய அரசாங்கம் மத சம்பந்தமான பண்டிகை நாட்களை விடுமுறை நாட்களாகக் கொள்ளாமல், நாட்டுக்கு உண்மையாகவே கலைப்பல புரிந்த நல்லவர்களின் நாட்களையே விடுமுறை நாட்களாகக் கொள்ளவேண்டுமென்று கூறுகின்றோம்.

இருநூறு ஆண்டுகளாக நாம் அடிமைப்பட்டுக் கிடந்தோம். நம்முடைய அடிமைத்தனத்தை எந்த மதமும் அறுக்கவில்லை, பார்த்துக் கொண்டுதான் இருந்தன. எப்படி? "உன்னுடைய 'தலை விதி', நீ அடிமையாக இருக்கும்படி நேரிட்டது" என்று கூறுவதுபோல் இருந்தன. மதம் ஏற்படுத்திய அந்தத் 'தலை விதி'யை, நாட்டின் நிலையை உணர்ந்த தலைவர்கள், தங்கள் உழைப்பால் மண்டையில் அடித்து நொறுக்கினர்கள்—தலை நொறுங்கவே தளை அறுபட்டது—அடிமை நிலை மாறியது—சுதந்திரம் கிடைத்தது. ஆனால், ஒருவர் உழைப்பின் பயனுமல்ல, பல உத்தமர்களின் தியாகத்தினாலும் பெற்ற சுதந்தரத்தை ஏற்றுநடத்திய மறக்க முடியாத ஒருசரித்திர நிகழ்ச்சியை, மதக் கோட்பாட்டின்படி நாள்—கோள் பார்த்தே நடத்தினர் என்றால்—அதிலும் ஒரு குறிப்பிட்ட மதக் கோட்பாட்டின்படி நல்ல நாள் பார்த்துச் சுதந்திர அரசாங்கத்தைத் தொடங்கினர் என்றால், மதக்கலப்பற்ற அரசியலையே இவர்கள் நடத்துகிறார்கள் என்று எப்படிக் கூற முடியும்? மதமா நமக்குச் சுதந்தரத்தை வாங்கித் தந்தது? மக்களின் உழைப்பன்றோ இன்று நாம் சுதந்தரமாக வாழ்வதற்கு அடி கோலித் தந்தது. இதனை மறந்து, மதங்களின் பெயரால் ஏற்படுத்தப்பட்ட ஆவணி அவிட்டத்தையும், கிருஷ்ண ஜயந்தியையும், விநாயக சதுர்த்தியையும், மாளய அமாவாசையையும், ஆயுத பூசையையும், பக்ரீத்தையும், மொகரத்தையும், தீபாவளியையும், வைகுந்த ஏகாதசியையும், சிவராத்திரியையும், அரசியல் விடுமுறை நாட்களாகக் கொண்டாடலாமா?

நாம் சுதந்திரம் பெறுவதற்குத் துணை புரிந்த பிரிட்டிஷ் பிரதமர் தோழர் அட்லி பிறந்த நாளைக் கொண்டாடுவது என்று வைத்துக் கொண்டாலும், அதில் சிறிதளவாவது பொருள் இருக்கிறது என்று திருப்தியடைய முடியும். ஆனால், "நாங்கள் அவ்விதம் செய்யமாட்டோம்; இந்நாட்டின் விடுதலைக்கு முழு விரோதியாக இருந்த தோழர் சர்ச்சில் நாளையே கொண்டாடுவோம்" என்று எவரேனும் கூறினால், அது எவ்வளவு கேவலமாகவும், கண்டனத்துக்குரியதாகவும், செவி கொடுத்துக் கேட்க முடியாததாகவும் இருக்குமோ, அது போன்றதே நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட நல்லவர்களின் நாட்களைக் கொண்டாடாமல், மத சம்பந்தமான நாட்களை அரசியல் விடுமுறை நாட்களாக்கிக் கொண்டாடுவது. "இருநூறு ஆண்டுகளாக நாங்கள் அடிமைப் படுகுழியில் வீழ்ந்து கிடந்ததைப் பார்த்துக் கொண்டிருந்த மதமே! எம்முடைய அரசியல் விடுதலைக்கு உதவி புரியாத மதமே! சமுதாய ஒற்றுமையைக் குலைத்து எங்களுக்கிடையே தீராத பிளவை உண்டாக்கியமதமே! இருக்கின்ற சிறிதளவு ஒற்றுமையையும், அரசியலின் [illegible] குலைத்து விடாதே! அரசியலை விட்டு விலகியிருப்பதே நீ எங்களுக்குச் செய்யும் பேருதவியாகும்" என்று கூறி, அதனை அரசியலோடு பிணைக்காமலும், அரசியலின் பேரால் அதற்கு விடுமுறை நாட்களை ஏற்படுத்தி, மீண்டும் அரசியல் நெருக்கடியை உண்டாக்கி, அரிதிற் பெற்ற சுதந்தரத்தை இழக்காமல் இருப்பதையே, மத அடிப்படையின் மீது எழுப்பப்படாத இன்றைய அரசாங்கம் தன்னுடைய கடமையாகக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றோம்.

இங்ஙனம் கூறுவதால், மதங்கள் இருக்கக் கூடாதென்றோ, அவை பாதுகாக்கப்பட வேண்டியவை அல்லவென்றோ நாம் கூறுவதாக எவரும் பொருள் கொண்டுவிடக் கூடாது. மதம் மக்களுக்குத் தேவை என்று கருதப்படும் வரை அவை இருக்க வேண்டியதும், பாதுகாக்கப்பட வேண்டியதும் அவசியம் என்று கூறப்படுவதை நாம் மறுக்கவில்லை. ஆனால், அந்தப்பாதுகாப்பு முறை, ஒரு சிலருக்கு மட்டும் பயன்படக்கூடிய மத சம்பந்தமான பண்டிகை நாட்களை, நாட்டிலுள்ள அனைவர்க்கும் பொதுவான விடுமுறை நாட்களாக்குவதால், மக்களிடையே பிளவையும் பகைமையையுமே உண்டாக்குவதாகும்.

ஒரு குறிப்பிட்ட மதத்தின் பெயரால் ஏதாவது ஒரு நாளை, அரசியல் விடுமுறை நாளாக்கினால், அந்த நாளைக் கொண்டாடுவதில் சம்பந்தமற்ற மக்கள், அந்த நாளைக் கொண்டாடுபவர்கள் மீது வெறுப்புணர்ச்சியைக் காட்டவும், கலகம் உண்டாக்கவும் காரணமாக நின்று, அந்நாளை விடுமுறை நாளாக்கிய அரசாங்கத்துக்கே தொல்லை கொடுப்பதாகவும் முடியும். எனவேதான் மத சம்பந்தமான பண்டிகை நாட்களை அரசியல் விடுமுறை நாட்களாக்காமல், நாட்டிலுள்ள அனைவரும் ஒன்று கூடிக் கொண்டாடி மகிழக் கூடிய நாட்களையே, அரசாங்கம் தனது விடுமுறை நாட்களாகக் கொள்ள வேண்டுமென்று கூறுகின்றோம்.

*

### பக்தனும் வேந்தனும்

15-ம் பக்கத் தொடர்ச்சி

கும் போகவேண்டியதில்லை. இந் நிகழ்ச்சியில் பேசப்படும் வரகுண பாண்டியன் என்ற மன்னனே இதற்கு நல் எடுத்துக்காட்டாக நிற்கிறான். எப்படியென்றால், நரி ஊளையிட்டாலும், தவளை கத்தினாலும், அவற்றைச் சிவநாம ஒலிகளாகக் கொள்ளும் அளவுக்கு வரகுணபாண்டியனுடைய சிவ அன்பு வளர்ச்சி யடைந்திருந்தது. என்ற போதிலும், யாழ் வாசித்தவர் சொக்கநாதர் தான் என்று பாணபத்திரர் கூறியதைப் பாண்டியன் ஒப்புக் கொள்ளவுமில்லை, கடவுள் அவ்விதம் செய்ததைப் பாராட்டவுமில்லை. கடவுள் அந்த விஷயத்தில் தலையிட்டதைத் தவறான செயல் என்றே மன்னன் கருதினன். அதனாலேயே பாணபத்திரருக்கு உணவும் உறையுளும் கொடுக்க மறுத்தான். இதனைக் கடவுளன்பர்கள் தங்கள் கருத்தில் நிறுத்திப்பார்க்க வேண்டும்.

இனிப் பாணபத்திரரின் வறுமையைப் போக்கச், சொக்கநாதர் கையாண்ட இன்னொரு திருவிளையாடலை எமது அடுத்த கட்டுரையில் காணுங்கள்.

*



# சர்க்கார் விடுமுறை நாட்கள்

எந்த ஒரு மதத்தின் அடிப்படையிலும் அரசியலை நடத்தப் போவதில்லையென்றும், மதக்கலப்பற்ற அரசியலே இனி நடைபெறும் என்றும் பிரதமர் நேரு அவர்கள் பல தடவைகளில் வற்புறுத்திக் கூறியுள்ளார். இதை நாமும் வரவேற்கிறோம். பல பிறப்பட்ட ஜாதிமதங்களைக் கொண்ட ஒரு நாட்டில், யாதாயினும் ஒரு குறிப்பிட்ட மதத்தின் பேரால் அரசியலை நடத்த முற்பட்டால், உண்மையாகவே அத்தகைய அரசியல் ஒழுங்காக நடைபெற முடியாதென்பதையும், அதனால் ஒற்றுமைக்குப் பதிலாக நாட்டில் பிளவே ஏற்படுமென்பதையும் எவரும் மறுக்க முடியாது.

மதக் கலப்பற்ற அரசியலையே நடத்துவதென்ற முடிவுக்கு வந்த சர்க்கார், இன்னொரு விஷயத்தையும் யோசித்து, அதற்கான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டியது அவர்களின் கடமை மட்டுமல்ல, மதக்கலப்பற்ற அரசியலை நடத்துவதென்பதற்கு அப்போது தான் முழு அர்த்தமும் ஏற்பட்டதாகும். அதாவது, மதக்கலப்பற்ற அரசியலை நடத்தும் ஒரு சர்க்கார், மதசம்பந்தமான விடுமுறை நாட்களை அரசியலின்பேரால் ஏற்படுத்தக்கூடாதென்பதாகும்.

மதக்கலப்பற்ற அரசியலை நடத்துவதாகச் சொல்லிக்கொண்டு, மத சம்பந்தமான விடுமுறை நாட்களை அரசியல் அதிகாரத்தின் பேரால் ஏற்படுத்துவது எந்த வகையிலும் நியாயமாகாது. மதசம்பந்தமான விடுமுறைகளை அதிகார பூர்வமாக ஏற்படுத்தும் ஒரு சர்க்காரை, அது, மதக்கலப்பற்ற அரசியலை நடத்துகிறதென்று எவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அதுமட்டுமல்ல, மத அடிப்படையற்ற அரசியலை நடத்துவதாகச் சொல்லிக்கொள்ளும் ஒரு சர்க்கார், தன்னுடைய ஆதிக்கத்திற்குட்பட்ட பள்ளிக்கூடங்களில் மத சம்பந்தமான போதனைகளை வைத்து, அவற்றை மாணவர்களுக்குப் பாடமாகக் கற்றுக்கொடுக்கும்படி செய்வதும் மதத்தை அரசியலோடு தொடர்பு படுத்தி அதனை அரசியற் பாதுகாப்பினின்றும் தனித்து நிற்க விடாமல் செய்வதுமாகும்.

மதங்கள் பாதுகாக்கப் படவேண்டுமென்பதில் சர்க்கார் கவலை எடுத்துக்கொள்ளுமாயின், அதனை யாரும் தடுப்பதற்கில்லை—தடுக்கவும் மாட்டார்கள். மதங்கள் தோன்றிய காலத்திலிருந்தே அவையெல்லாம் அரசியலாரின் பாதுகாப்போடுதான் இருந்து வருகின்றன. அரசியலாரின் பாதுகாப்போடு மட்டுமல்ல, அரசியல் நடவடிக்கைகள் அனைத்துமே மதத்தை அடிப்படையாக வைத்துத்தான் இதுவரை நடத்தப்பட்டு வந்தன. இந்த நிலைமாறி, இனி, அரசியலானது மதக்கலப்பற்ற முறையில் நடத்தப்பட வேண்டுமென்பதே இன்றைய சர்க்காரின் முடிவாகும்.

அரசியல் மதக்கலப்பற்றதாக இருந்தாலும், அந்த அரசியலின் கீழ் இருக்கும் மதங்கள் அரசியலாரால் பாதுகாக்கப் படவேண்டும் என்று கூறப்படுவதையும் நாம் குற்றமாகக் கொள்ளவில்லை. நாட்டில் மதங்கள் இருக்கும்வரை, அவை எந்த வகையிலாவது பாதுகாக்கப்படத்தான் வேண்டும். ஒருமதம் தன்னைத் தானே பாதுகாத்துக்கொள்ளும் அளவுக்குச் சக்தியற்றதாயின், அதனைப் பாதுகாத்துக் கொடுப்பது அரசியலாரின் கடமையுமாகும். பண்டைக் காலங்களில் கூட மதங்கள் எல்லாம் அரசாங்கத்தின் பாதுகாப்பின் கீழ்த்தான் இருந்து வந்தன. அது மட்டுமல்ல, இருக்கின்ற மதத்தை அழிப்பதும், புது மதத்தை உண்டாக்குவதும்கூட அந்தக்காலத்து அரசர்களின் வேலைகளில் ஒன்றாகவே இருந்து வந்ததென்பதைச் சரித்திரம் கூறுகின்றது. எனவே, மதங்களை அரசாங்கம் பாதுகாப்பதை நாம் தவறென்றோ, பாதுகாக்கக் கூடாதென்றோ கூறவில்லை.

ஆனால், மதக்கலப்பற்ற ஒரு அரசியலில், மதசம்பந்தமான விடுமுறைகளை அரசியலாரே முன்னின்று ஏற்படுத்துவதும், அந்த விடுமுறைகளை அனுசரிக்கும் முறைகளைச் சர்க்கார் அறிக்கைகள் மூலம் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவதும் அவசியமான—தேவையான காரியங்களா என்பதே நம்முடைய கேள்வியாகும். உதாரணமாக, அண்மையில் நிகழ்ந்த சூரியகிரகண விடுமுறையின்போது, சர்க்கார் ஒரு அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கையில், மக்கள் சமுத்திர ஸ்நானம் செய்யப் போகும்போது கையாள வேண்டிய முறைகளைக் குறிப்பிட்டிருந்ததோடு, கடலுக்குள் ஆளைவிழுங்கும் சுறா மீன் இருப்பதாகவும், அதன் வாயில் சிக்கிக்கொள்ள வேண்டாமென்றும் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது. சூரியகிரகணத்தின் போது, அலை மோதி மக்களை ஆபத்துக்குள்ளாக்கும் கடலில் முழுகும்படி செய்வதும், கடலுக்குள் இருக்கும் ஆள்விழுங்கிச் சுறாமீனுக்குத் தப்பித்துக்கொள்ளும்படியான எச்சரிக்கை செய்வதும், எவ்வளவு பயங்கரமான ஆபத்தென்பதை உணர்ந்தும், சர்க்கார், அதிலும் மதக்கலப்பற்ற அரசியலை நடத்தும் சர்க்கார், மதசம்பந்தமான சூரியகிரகண நாளை அரசியல் விடுமுறை நாளாகக் கொள்ளலாமா? அண்மையில் நிகழ்ந்த சூரியகிரகண ஸ்நானத்தின்போது, கல்கத்தாவிலுள்ள பத்துப்பேர் சமுத்திரத்துக்கு இரையாகிவிட்டனர் என்று பத்திரிகைகளில் வந்த செய்தியும் சர்க்காருக்கு எட்டியிருக்குமென்றே நம்புகிறோம். இவ்வளவு ஆபத்துக்கள் நிறைந்த ஒரு விழாவைச், சர்க்கார் ஏன் அரசியல் விடுமுறை நாளாக்கவேண்டும்? இத்தகைய உயிருக்கே ஆபத்தை உண்டாக்கக்கூடிய பயங்கர விழாக்களை மக்கள் கொண்டாடக் கூடாதென்று சர்க்கார் ஏன் தடைசெய்யக் கூடாது?

மக்களின் உயிருக்கு ஆபத்தையும், பொருளுக்கு அழிவையும் உண்டாக்கக் கூடிய மதசம்பந்தமான பண்டிகை நாட்களை அரசாங்க விடுமுறை நாட்களாகக் கொள்ளாமல் இருப்பதே, அதிலும் மதக்கலப்பற்ற அரசியலை நடத்தும் சர்க்கார் இத்தவகையில் மிகவும் விழிப்பாக இருப்பதே, அந்தச் சர்க்கார் பொதுமக்களுக்குச் செய்யும் பேருதவியாகும். மதசம்பந்தமான பண்டிகை நாட்களை, அந்தந்தமதங்களில் பற்றுக் கொண்டவர்களின் தனிப்பட்ட விஷயங்களாக விட்டு விடுவதேயன்றி, அவற்றை அனைவர்க்கும் பொதுவான விடுமுறை நாட்களாக்குவதை அரசியல் நடவடிக்கைகளில் ஒன்றாகச் சர்க்கார் மேற்கொள்ளக் கூடாதென்பதே எமது கருத்தாகும்.

இனி, அரசியல் விடுமுறை நாட்களாக, நாட்டின் விடுதலைக்காகவும்

நாட்டின் பொது நன்மைக்காகவும் பாடுபட்டு அதற்காகவே உயிரையும் தத்தம் செய்த உத்தமர்களின் நினைவாக அவர்கள் மறைந்த நாட்களைக் கொண்டாடுவதே சிறந்த முறையும், எவரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமாகும். அந்நாடு, இந்நாடு தந்தாக வைப்பதற்காக அடிகோலப்பட்டநாளையும், சுதந்தரம் கிடைத்த நாளையும் அரசியல் விடுமுறை நாட்களாகக் கொள்ளலாம். மாகாண சர்க்கார், அந்தந்த மாகாணங்களில் இருந்து மக்களின் பொது நன்மைக்காகப் பாடுபட்டு அதன் பொருட்டாகவே தங்கள் உயிரையும் தியாகம் செய்த பெரியார்களின் நினைவாக அவர்கள் மறைந்த நாட்களை அந்தந்த மாகாண அரசியல் விடுமுறை நாட்களாகக்கொள்ளலாம்.

இப்படிப்பட்ட சிறந்த நாட்களை அரசியல் விடுமுறையாகக் கொள்வதில் யாருக்கும் வெறுப்போ பொறாமையோ ஏற்பட்டுவிடாது. எந்தச் சாதியாரும் எந்த மதத்தாரும் இத்தகைய விடுமுறை நாட்களை வரவேற்றுக்கொண்டாடுவார்களேயன்றி, அவை தங்களுக்குரிய விடுமுறை நாட்களல்லவென்று ஒதுங்கி நிற்கமாட்டார்கள். உதாரணமாகத் தமிழ் நாட்டில் கிருஷ்ணஜயந்தி என்ற மதசம்பந்தமான விடுமுறை நாளை எடுத்துக்கொள்வோம். இந்த விடுமுறைநாளை இங்குள்ள முஸ்லீம்களோ, கிறிஸ்தவர்களோ, கொண்டாடமாட்டார்கள். அதுமட்டுமல்ல, இந்துமதத்தின் ஒரு பிரிவினரான சைவர்கள்கூட இந்நாளைத் திருநாளாகப் பெரும்பாலும் கொள்வதில்லை. ஆனால், இது அரசாங்க விடுமுறைநாளாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. கிருஷ்ணஜயந்தி என்ற மதசம்பந்தமான விடுமுறை நாளுக்குப் பதிலாகத், திருவள்ளுவர்பிறந்த நாளை அரசியல் விடுமுறைநாள் என்று ஏற்படுத்திக்கொண்டால், தமிழ்நாட்டிலுள்ள முஸ்லீம்களும், கிருஸ்தவர்களும், சைவர்களும், வைணவர்களும், அதில் கலந்து கொள்வார்கள். திருவள்ளுவர் எந்த ஒரு குறிப்பிட்ட ஜாதியையோ மதத்தையோ சாராமல், மக்கள் அனைவருக்கும் அவசியம் தேவையான பொது அறிவைப் புகட்டியவர். இவர், சுயநலக்காரணமாக, அவருக்கு மதப்பூச்சுப் பூசி அவரைத் தங்கள் மதத்தைச் சேர்ந்தவராகப் பாத்தியம்கொண்டாடினபோதிலும், அவருடைய நூல் (திருக்குறள்) மக்கள் அனைவருக்குமே பொதுவான — இன்றியமையாத அறிவைப் புகட்டும் முறையில் அமைந்துள்ளது என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

எனவே, கிருஷ்ணஜயந்திபோன்ற மதசம்பந்தமான விடுமுறைநாட்களை அந்த நாட்களைக்கொண்டாட விரும்பும் தனிப்பட்டவர்களின் விருப்பத்திற்கு விட்டுவிட்டு, ஜாதிமதங்களைக் கடந்து, மக்கள் அனைவருடையவும் நன்மைக்காகப் பொதுநலப் பணிபுரிந்த பெரியார்களின் நாட்களையே அரசியல் விடுமுறை நாட்களாகக் கொள்ளவேண்டுமென்று சர்க்காருக்கு யோசனை கூறுகின்றோம். இந்த யோசனையை மதச்சார்பற்ற அரசியல் நடத்தும் முடிவோடுள்ள இன்றைய சர்க்கார் நடுநிலைமை தாங்கி ஏற்றுக்கொள்ளுமா, அல்லது சொல் ஒன்றும் செயல் இன்றொன்றுமாகக் காரியங்களை நடத்திச்செல்லுமா என்பது இன்றைய நிலையில் முடிவு கட்டிக் கூறமுடியாததாகவே இருக்கிறது.

ஏனெனில்; மதச்சார்பற்ற அரசியலையே நடத்தப்போவதாக எந்தப் பண்டிதநேரு கூறினாரோ, அவரே சிலநாட்களுக்குமுன், மதச்சார்பற்ற அரசாங்கத்தின் முதல் கப்பலான ஜலஉஷாவை இந்துமதமுறைப்படியுள்ள சடங்குகள் எல்லாம் குறைவறச்செய்து, அதைக் கடலில் மிதக்கவிட்டார். ஜலஉஷா என்ற கப்பலுக்கு ஒரு குறிப்பிட்ட மதச்சடங்குகள் செய்யப்படுமானல், அதனை மதச்சார்பற்ற ஒரு அரசாங்கத்துக்குச் சொந்தமான கப்பல் என்று எப்படிக் கூறமுடியும்? ஒரு குறிப்பிட்ட மதச்சடங்குகளைச்செய்தால்தான் தங்களுடைய அரசியல் ஒழுங்காக நடக்குமென்ற மனப்போக்கோடு உள்ளவர்களை, மதச்சார்பற்ற ஒரு அரசியலை நடத்துகிறார்கள் என்று எப்படிக்கூற முடியும்? விஞ்ஞான முறைப்படி இயந்திர சாதனங்களைக்கொண்டு அமைக்கப்பட்ட ஒரு கப்பல், விஞ்ஞான முறைகளை முற்றிலும் வெறுக்கும் மதக்கோட்பாடுகளுடன் சடங்குகள் செய்யப்பட்டுக் கடலில் மிதக்கவிடப்படுமாயின், அந்தக் கப்பல் விஞ்ஞான உதவியால் மிதக்கின்றதா அல்லது மதத்தின் மகத்துவத்தால் மிதக்கின்றதா என்பதனை மக்கள் எப்படி அறிந்துகொள்வது? விஞ்ஞானம் எந்த அளவுக்கு உச்சநிலையை அடைந்தபோதிலும், மதத்தின் தலையீடு பெருகிவிடின், அது பயனற்றதாகும் என்பதனையன்றோ இந்நிகழ்ச்சி எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

இனி, அந்தக் காலத்தில் மதசம்பந்தமான மந்திரபலத்தால் "புஷ்பகவிமானம்" என்ற பெயரோடு ஒரு வானஊர்தி பறந்ததாகப் புராணஇதிகாசங்களில் சொல்லப்பட்டிருக்கிறதே! குதிரை, யானை, முதலான விலங்குகள்கூட பண்டைக் காலத்தில் பறக்கும் இயல்பைப் பெற்றிருந்தனவாமே! பரமசிவன்கூடக் கைலையத்திலிருந்து அடியவர்களுக்குக் காட்சியளித்ததாகவும் சொல்லப்படுகின்றதே! தம் பூசை மீட்டியபடியே நாரதர், வாகனம் எதுவுமின்றியே திரிலோக சஞ்சாரம் செய்தாரென்றும் கூறப்படுகின்றதே! இவையெல்லாம் மதத் தொடர்பான மகத்துவத்தால் நடைபெற்றதாகவே சொல்லப்படுகின்றது. ஆனால், அந்த அற்புத நிகழ்ச்சிகள் எல்லாம் இன்று நடைமுறையில் இல்லை. என்றாலும், விஞ்ஞானத்தின் துணையினால், அந்நிகழ்ச்சிகள் எல்லாம் படக்காட்சிகள் மூலம் இன்று காட்டப்படுகின்றன. இந்த அற்புத மாறுதலை வைத்துக் கவனிக்கும்போது, விஞ்ஞானமுறையில் அமைக்கப்பெற்ற ஜலஉஷா என்ற கப்பலை மதசம்பந்தமான மந்திரங்களை ஓதிக் கடலில் மிதக்கவிட்ட நிகழ்ச்சி, எத்துணைக் கேலிக்குரியதாக இருக்கிறது என்பதனை எண்ணிப் பாருங்கள். ஒருகாலத்தில் இருந்ததாகச் சொல்லப்படும் மத அற்புதங்கள் எல்லாம், பயனற்றவை — பொருளற்றவை — உண்மைக்கு வேறானவை என்று கருதப்பட்டுக், காலப்போக்கு எத்தனையோ மாறுதல்களை உண்டாக்கிய இக்காலிலும், விஞ்ஞானத்தின் பேராற்றலை மறந்து, விஞ்ஞானத்துக்கும் மேலாக ஏதோ ஒன்று இருப்பதாகக் கருதி, அதன் துணைகொண்டே விஞ்ஞான முறைகளை உருவாக்கமுடியும் என்றமுறையில் காரியங்களைச் செய்வது, அதிலும் அரசியலின் பேரால், அதிகாரத்தோடு செய்வது அறிவுடைமையாகுமா? இன்று வளர்ச்சியடைந்து வரும் விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் என்று சொல்லப்படும் மதக்கோட்பாடுகளுக்குக்கூட உயிர்ப்பிச்சை

(6-ம் பக்கம் பார்க்க)



# ★ மேதினி எங்கும் மேதின விழா ★

உலகத்தின் பலபாகங்களிலும் தொழிலாளர்கள் வீதிகளில் ஊர்வலமாகச் சென்று 59வது மேதின விழாவைக் கொண்டாடினர்.

## லண்டனில்

கனத்தமழை பெய்தது கூட ஏராளமானவர், கலந்துகொண்ட மேதினக் கூட்டத்தில் தொழில் சர்க்காரின் பிரதம பேச்சாளர்களான பிரதமர் அட்லி, மற்றும் பலர் பொதுக்கூட்டங்களில் பேசினார்கள்.

தொழிற் சங்கத்தைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான லண்டன் அங்கத்தினர்கள் தேம்ஸ் ஆற்றங்கரையோரம் ஒன்றுகூடி வாத்தியங்களுடனும் கொடிகளுடனும் ஹைட் பார்க்குக்கு ஊர்வலமாகச் சென்றனர். சர்க்கார்தொழிலாளர்களுடைய பொதுவுடைமைக் கட்சிப் பொதுக் காரியதரிசியான ஆர்தர் ஹார்னர் உட்படப் பலர் சொற்பொழிவாற்றினார்கள். ஊர்வலத்தின்பின்பகுதியில் பலமான பொதுவுடைமைக் கட்சியின் கோஷ்டி சென்றது.

ஸ்பானிஷ் உள்நாட்டுக் கலகப் பாட்டுகளைப் பாடிக்கொண்டும் பிராங்கோ வீழ்கவென்று கோஷித்துக்கொண்டும் ஸ்பானிஷார் ஊர்வலத்துடன் சென்றனர்.

பிரிஸ்டலில் ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் சொற்பொழிவாற்றினார்.

லண்டன் கிழக்குப்பகுதியில் ஸர் ஆஸ்வால்டு மோஸ்லியின் தொழிற் சங்க இயக்க கூட்டத்தில் ஏற்பட்ட கைகலப்பைப் பலமான போலீஸ் படை அடக்கிவிட்டது.

## பேர்லின்

ஜெர்மன் தலைநகரான பெர்லினில் மொத்தம் 2 லக்ஷம் பேர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர், ஆர்ப்பாட்டம் இரு பகுதிகளாக ருஷிய எல்லையில் லஸ்ட் கார்ட்டெனிலும் பிரிட்டிஷ் எல்லையில் பிளாட்ஸ்டே ரீபப்ளிக்கிலும் நடைபெற்றன.

பெர்லின் ருஷிய சானுவத்தலைவராயிருக்கும் மார்ஷல் வாஸிலி ஸோகோலோவ்ஸ்கி வெளியிட்ட மேதின உத்தரவில் நாஜிகளால் கைப்பற்றப்பட்ட சொத்துகள் யாவும் ருஷிய எல்லைக்குள் உடனே அரசியல் கட்சிகளுக்கும் தொழிற் சங்கங்களுக்கும் ஜனநாயக ஸ்தாபனங்களுக்கும் திருப்பித் தரப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்.

## டிரீஸ்டி

எதிர்கட்சிகளுள்ள இங்கு, பொதுவுடைமைக் கட்சியினர் விழாவை வெகு அழகாகக் கொண்டாடினர்.

பிரிவினையை ஆதரிப்பவர்கள் பழைய பிரிட்டிஷ் ராணுவ உடைகளை அணிந்துகொண்டு சென்றபோது பலத்த கரகோஷங்கள் செய்யப்பட்டன. ஆண்கள் சிகப்புச் சட்டையும் வெள்ளைக்கால் சட்டையும் அணிந்திருந்தனர். பெண்கள் வெள்ளைச் சட்டையும் ஊதா அங்கியும் உடுத்தி யிருந்தனர்.

## ரோம்

பியாஸா டெல் போப்போலோவில் 25 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கூடியிருந்தனர். நான்கு வல்லரசுகளின் தொழிற்சங்கத் தலைவர்களும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

ருஷியப் பிரதிநிதியான குஸ்னெட்ஸோவ் பேசும்போது யுத்த வெறி பிடித்தவர்கள் 3வது உலக யுத்தம் ஆரம்பிப்பதை நாம் பூரணமாய்த் தடுக்கவேண்டும் என்று கூறினர்.

## டோக்கியோ

50 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஜப்பானியர்கள் தொழிலாளர்களின் தலைவர்கள் பேசுவதை கேட்பதற்காக அரண்மனையில் கூடினர். சொற்பொழிவுகள் முடிவுற்ற பின் அவர்கள் முதலாளித்துவத்தைக் கண்டனம் செய்யும் ஸ்லோகங்கள் எழுதப்பட்ட அட்டைகளை ஏந்திக்கொண்டு, நகர வீதிகளில் ஊர்வலமாகச் சென்றனர்.

எல்லா ஜப்பானிய நகரங்களிலும் மே தினம் வெகு அமைதியாகக் கொண்டாடப்பட்டது. சென்ற 3 வருடங்களுக்குள் இந்த வருடமே மேதினம் வெகு அமைதியாகவிருந்ததென்று அமெரிக்காவின் 8-வது இராணுவ சேனாதிபதியான லெப் ஜெனரல் ராபர்ட் எல் எக்கல் பெர்கர் கூறுகிறார்.

## கொரியா:

வலதுசாரி கட்சியின் தொழிற் சங்கங்களைச் சேர்ந்த 80 ஆயிரம் அங்கத்தினர்கள் ஸியோல் ஸ்டேடியத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். பொதுவுடைமைக் கட்சியினரால் ஏதாவது கலகம் ஏற்படலாமென்று அமெரிக்கத் துருப்புக்கள் தயாராக இருந்தனவெனினும் எவ்வித அசம்பாவிதமும் நேரவேயில்லை.

## ரங்கூன்

பர்மாவிலுள்ள தொழிலாளர்கள் யாவரும் நாள்முழுவதும் மேதின விழா கொண்டாடினர். ரங்கூன் வீதிகளில் நீண்டதோர் ஊர்வலம் மிக ஒழுங்காகச் சென்றது.

மிகவும் சுபிக்ஷமான அபேதவாத நாட்டை அமைக்க தொழிலாளர் ஐக்கியப்பட வேண்டுமென்று பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் அடங்கிய கூட்டத்தில் பிரதமர் தாக்கின் நு வேண்டிக்கொண்டார்.

## பேங்காக்

ஓர் புதிய தொழிற் சங்கத்தைத் திறந்துவைத்துச் சயாம் மே தினம் கொண்டாடிற்று.

சயாமிய தொழிலாளர்களில் ஒருவராய் தாம் சயாம் பாட்டாளிகளுடைய நலன்களை அபிவிருத்தி செய்வதாய்ப் பிரதமர் பிபுன் ஸொங்க்ராம் நேற்று உறுதி கூறினார்.

50 ஆயிரம் பேர் கொண்ட மேதினக் கூட்டத்தில் ஸொங்க்ராம் பேசும்போது தொழிலாளர்கள் அரசுக்கும் தேசத்துக்கும் விசுவாசமுள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்று வற்புறுத்தினார்.

பல சயாமிய சீன தொழிற் சங்கங்கள் மிகவும் விரிவான முறையில் கொண்டாடின.

## கொழும்பு

கொழும்பில் 6 ஊர்வலங்களும் 3 பொதுக் கூட்டங்களும் நடைபெற்

றன. பொதுவுடைமைக் கட்சி, பொல்ஷிவிக் கட்சி, இலங்கைத் தொழிற் கட்சி, ஐக்ய தொழிற் சங்கங்கள் முதலியன பங்கெடுத்துக் கொண்டன.

வேலையில்லாத் திண்டாட்டத்தினால் அவதியுறும் தொழிலாளர்களுக்கு சர்க்கார் உடனே வேலை கொடுக்க முயற்சிக்கவேண்டுமென்றும், இல்லாவிடில் நிவாரணமளிக்க வேண்டுமென்றும் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஊர்வலம் நடத்தியவர்கள் மார்ஷல் திட்டத்தைக் கண்டித்து பிரிட்டிஷ் அமெரிக்கா, பிரெஞ்சு தலைவர்களை விநோதமாக வரையப்பட்ட கொடிகளை ஏந்திக்கொண்டு சென்றனர்.

குழப்பங்கள் ஏற்படுமென்பதற்காக பிரிட்டிஷ் அமெரிக்க ஸ்தானிகராலயங்களில் தற்காப்பு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

## புடா பெஸ்ட்

லட்சக்கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொண்ட ஊர்வலம் சுமார் 6½-மணி நேரத்திற்கு நீடித்திருந்தது. ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் ஹீரோஸ்கொயரை அடைந்தவுடன் உதவி பிரதமர் மாட்டியஸ் ரக்கோஸையும், இதர பொதுவுடைமைக் கட்சித் தலைவர்களையும் ஆரவாரம் செய்து போற்றினர்.

அரசியல் சம்பந்தமான சொற்பொழிவுகள் நிகழ்த்தவில்லை யெனினும், ஜனாதிபதி ட்ரூமன், எர்னஸ்ட் பெவின், வின்ஸ்டன் சர்ச்சில் முதலியோரைத் தாக்குகின்ற ஸ்லோகங்கள் எழுதப்பட்ட அட்டைகள் கொண்டு செலலப்பட்டன.

## நேப்பிள்ஸ்

நியோ பாஸிஸ இத்தாலி சமுக இயக்கத்தின் தலைமைக் காரியாலயத்தை பொதுவுடைமைக் கட்சியினர் தகர்க்க முயன்றனர். பாலமெண்ட் சபையின் மேஜைகள் தகர்க்கப்பட்டு அங்கு ஆயுதங்களாக உபயோகிக்கப்பட்டு, போலீசார் தாக்கப்பட்டனர். இவர் கைது செய்யப்பட்டதுடன் 6 போ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப் பட்டனர்.

## பாரிஸ்

பொதுவுடைமைக் கட்சியினர் 2 மைல் நீளத்திற்கு பாரிஸ் நகர் வழியாய் டேலாபோஸ் டிலேய்க்கு சென்றனர். ஊர்வலம் சென்றவர்களுடன் ஷெ கட்சியின் காரியதரிசி ஜெனரலான மோரீஸ் தோரஸ் பார்லிமெண்டரி குழுவின் தலைவரான ஜேம்ஸ் டக்லோஸ் ஆகியோரும் இருந்தனர்.

## புக்கா ரெஸ்ட்

ருஷியர்களைப்போன்று ராணுவ உடையணிந்த 40 ஆயிரம் ருமேனிய தொழிலாளர் தலைமையில் மேதின ஊர்வலம் நடைபெற்றது. 2 இலட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களும் விவசாயிகளும் ஊர்வலத்தின் பின்னுகச்சென்றனர்.

## ஏதன்ஸ்

கொரிலாப் படைகளின் தலைவரான ஜெனரல் மார்க்கோஸ் வானொலியில் பிரசங்கம் செய்யும்போது "ஜனங்களுக்கு புதிய ஜனநாயகம்" வாங்கித் தருவதாகவும் நிச்சயமாய் வெற்றி கிடைக்குமென்பதாகவும் உறுதி கூறினார்.

## பெல்கிரேடு

3 மணிநேரம் நீடித்த ஊர்வலம் செல்வதை மார்ஷல் டிட்டோவும் இதர சர்க்கார் தலைவர்களும் பார்த்துக்கொண்டிருந்தனர்.

## மனிலா

50 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் பிலிப்பைன்ஸ் மேதின ஊர்வலத்தில் கலந்துகொண்டன ரெனினும், முந்திய வருடங்களில் எடுத்துச்சென்றதைப்போன்றசெங்கொடிகளை இம்முறை எடுத்துச் செல்லவில்லை.

400 தொழிற்சங்கங்களைச்சேர்ந்த 3 இலட்சத்திற்கு அதிகமானவர்கள் தீவு முழுவதிலும் மேதின விழாவில் ஒழுங்காகப் பங்கெடுத்துக் கொண்டனர் என்று போலீசார் கூறுகின்றனர்.

ஜனாதிபதி எல்பிடியோ குவிரினோ ஜப்பானியர் ஆட்சியின்போது ஜனாதிபதியாயிருந்த டாக்டர் ஜோஸ் பி. லாரல் முதலியோர் முக்கிய சொற்பொழிவாளர்களாயிருந்தனர்.

## சிங்கப்பூரில்

மலாயாவில் மேதினம் எவ்வித அசம்பாவிதமும் இல்லாமல் நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது. சிங்கையில் நாள்முழுவதும் போலீசார் மிக ஜாக்கிரதையாகப் பாரா கொடுத்துக்கொண்டு நின்றனர். அதேபோன்று பினாங்கிலும் முன்னெச்சரிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

கோலாலம்பூரில் மலாயன்ரயில்வே ஒர்க்ஷாப்பைச் சேர்ந்த 2000 மெக்கானிக்குகள் மேதினத்தன்று விடுமுறை எடுத்துக் கொண்டனர்.

## பினாங்கில்

பினாங்கில் டத்தோ கிராமாட்டில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பொதுக் கூட்டம் கூடியும் ஒருமைல் நீளமுள்ள ஊர்வலம் நகர வீதிகளில சென்றும் மேதினக் கொண்டாட்டம் நடைபெற்றது.

## ஈப்போவில்

ஈப்போவில் பெரும்பாலான தொழிலாளர்கள் விடுமுறை யெடுத்துக் கொண்டன ரெனினும் ஊர்வலம் அல்லது பொதுக்கூட்டமெதுவும் நடைபெறவில்லை.

## மாஸ்கோவில் சிறப்பான கொண்டாட்டம்

முந்திய இரண்டு வருடங்களைக் காட்டிலும் இவ்வருடம் மாஸ்கோ மேதினக் கொண்டாட்டத்தில் இருமடங்கு அதிகமான ராணுவத்தினர்களும், டாங்கிகளும், விமானங்களும் கலந்து கொண்டன.

இந்தத் துருப்புகளும், மற்றவைகளும் சமாதான நம்பிக்கையூட்டுவதற்காகவே இருக்கின்றனவென்று ஜெனரல் பல்கானின் கூறியதை பிரதமர் ஜோஸப் ஸ்டாலின், வெளிநாட்டு மந்திரி மாலடோவ் மற்றும் பல அரசியல் முக்கியஸ்தர்கள் லெனின் சமாதியின்மீது நின்று கேட்டுக் கொண்டிருந்தனர்.

மிகவும் பிரமாண்டமான ராணுவ, சிவிலியன்கள் அடங்கிய இக்கூட்டம் சுமார் 5-மணிநேரம் நடைபெற்றது.

இதற்கு முன் ருஷிய ராணுவம் இவ்வளவு சுவர்ச்சிகரமாய் காணப்படவில்லை யென்று விழாக் கொண்டாட்டத்தைக் கண்ட வெளிநாட்டு ராஜீய பிரதிநிதிகள் ஒப்புக்கொள்ளுகின்றனர்.

விழாவில் பலதரப்பட்ட நவீன ஆயுதங்களும் காணப்பட்டன. சில பீரங்கிகள் நான்கு வாகனங்கள் இழுத்துவரக்கூடிய அளவுக்குப் பெரிதாக இருந்தன.

ஆனால் யாவற்றையும் விட ருஷ்ய விமானங்களுடைய காட்சியே மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. பி-29 ரக விமானங்களைப் போன்ற 4-எஞ்சின் விமானங்கள் முன்னைவிட 5-மடங்கு அதிகமாக வெகு அழகாய்ப் பறந்து சென்றன. 2-விதமான ஜெட் விமானங்கள் (காற்றாடி இல்லாதவை) அளவுகடந்த வேகத்துடன் பறந்தன. பல 2-எஞ்சின் விமானங்களும் ஒரு எஞ்சின் சண்டை விமானங்களும் கலந்து கொண்டன.

இதைப்போலவே லெனின் மின்ஸ்க்கீவ், ஒடிஸா, மற்றும் பல இடங்களில் விழாக்கள் கொண்டாடப் பட்டனவென்று பத்திரிகைகள் கூறுகின்றன.

## பிரஸல்ஸ்

20-ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் நேற்று மேதினக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டனர்; அபேதவாதக்கட்சி பிரதமர் டாக்டர் ஸ்பாக் பேசும்போது "புதிய உலக யுத்தம் ஏற்படுமென்ற பயமே இல்லை என்றாலுங்கூட எச்சம்பவமும் எந்த நேரத்திலும் நேரக்கூடும். இன்று உலகத்தில் எந்தச் சர்க்காரும் வேண்டுமென்று யுத்தத்தைத் தூண்டாது" என்று கூறினார்.

—✲—



# இந்தியை எதிர்ப்போம்

—✲—

தமிழ்நாட்டுக்கு இந்தி மொழி தேவையில்லை—அது கட்டாய பாடமாகக்கூடாது என்பது குறித்த போராட்டம் ஒன்று 1938-ல் நடைபெற்று, அதில் தமிழ் மக்கள் சரித்திர பூர்வமான வெற்றியடைந்தனர். மீண்டும் இந்தியைக் கட்டாய பாடமாக்கும் முயற்சியை இன்றைய சர்க்கார் மேற்கொண்டுள்ளது.

'இந்தியை எதிர்ப்போம்' என்ற கருத்தைக் காங்கிரஸ் இதழான "பிரசண்டன் விகடன்" வெளியிட்டிருப்பதைச் சர்க்கார் கவனத்துக்குக் கொண்டுவரும் முறையில் அதனை இங்கு வெளியிடுகிறோம்:—

"அடுத்த ஆண்டு தொடக்கமுதல் இந்தி மொழியைப் பள்ளிக்கூடங்களில் கட்டாயபாடமாக வைக்கச் சென்னை அரசாங்கம் முன்வந்திருக்கிறது. முதல் பாரத்திலிருந்து தொடங்கி ஆறுவது பாரம் வரையில் இது கட்டாயபாடமாக இருக்கும். ஆறுவது பாரத்தில்தான் இதற்கான இறுதிப் பரீட்சையும் நடைபெறும் என்று நாம் அறிகிறோம். இந்த அறிவிப்பைச் சமீபத்தில் சட்டசபையில் கல்வி அமைச்சர் அவினாசிலிங்கம் செட்டியார் கொடுத்திருக்கிறார்.

இந்திக்கோ அன்றி இந்துஸ்தானிக்கோ இந்நாட்டின் பொதுமொழியாக இருக்கும் தகுதி கிடையாது என்பது வெள்ளிடை மலை. இந்த நமது கருத்தைப்பேரறிஞர்களும், கல்வி நிபுணர்களும் அவ்வப்போது எடுத்துக் காட்டியும் வந்திருக்கிறார்கள். சமீபத்தில் பேசிய காசி பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களும் இதனை நன்கு எடுத்துக்காட்டியுள்ளார். இந்தியை எதிர்க்க தமிழர்கள் சரித்திரப் பிரசித்தமான ஒரு மொழிப் போராட்டத்தை 10 ஆண்டுகளுக்கு முன்னே தொடங்கி வெற்றிகரமாக நடத்தியிருக்கிறார்கள். இப்போராட்டத்தில் இரண்டொரு வாலிபர்கள் உயிர் துறக்கவும், ஆண்களும், பெண்களுமாக ஆயிரம் பேருக்குமேல் சிறைக்கும் சென்று தங்கள் எதிர்ப்பைக் காட்டியிருக்கிறார்கள். பத்திரிகைகளும் இந்தியைக் கண்டித்து, அதன் பொது மொழித் தன்மையின் அபத்தத்தை அம்பலப் படுத்தி யிருக்கிறது. நாமும் இப்பத்திகளில் பலமுறை இந்தியை வேண்டாத மொழி என்பதாகக் கண்டித்து இருக்கிறோம். இந்நிலையில் அவசரப்பட்டுக் கல்வி மந்திரி இந்தியைக் கொண்டுவந்து நுழைத்திருப்பது குறித்து நாம் வருந்துகிறோம். இன்று ஆறுவது பாரத்தில் பரீட்சை என்று சொல்லப்படுவது, காலக்கிரமத்தில் ஒவ்வொரு ஆண்டிலும் பரீட்சை கொடுக்கப்படவேண்டும் என்பதாக மாறலாம். இதில் சிறிதும் சந்தேகமில்லை.

தமிழர்களின் விழிப்புணர்ச்சியை நன்கு தெரிந்திருக்கும் கல்வி அமைச்சர், அவசரப்பட்டு இம்மாதிரி முடிவுகளுக்கு வருவது, தமிழர்களின் போர்க்குணத்தைக் கிளறி விடுவதாகவே வந்துமுடியும் என்று நாம் எச்சரிக்கிறோம். இதன் விளைவாக மந்திரி சபைக்கும், ஒரு கெட்ட பெயரை அவசியமில்லாமல் ஏற்படுத்திக் கொடுத்த சிறுமை கல்வி அமைச்சரை வந்தடையக் கூடுமோ என்று நாம் அஞ்சுகிறோம்.

மொழிப் பிரச்னையில் கிழக்கு வங்காள மக்கள் இந்து, முஸ்லீம் என்ற வேற்றுமையில்லாமல் நடந்து கொண்டதைப்போல், தமிழர்களை வரும் கட்சி வேறுபாடுகளை மறந்து, இந்தியை எதிர்க்க வேண்டுமாய் நாம் கேட்டுக் கொள்கிறோம். சமாதான வழிகளில் அரசாங்கம் பணிய மறுத்தால், சாத்வீகப் போராட்டத்தைத் தொடுக்க வேண்டியது வரும் என்பதை அரசாங்கத்துக்கு தமிழர் நலத்தை விரும்பும் கட்சிகள் யாவும் ஒன்று சேர்ந்து தெரிவிக்க வேண்டியது அவசியமாகும்."

✲


## ஏஜண்டுத் தோழர்களுக்கு

பாக்கி வைத்திருக்கும் ஏஜண்டுத் தோழர்கள் தங்கள் பாக்கி முழுவதையும் உடனே அனுப்பிவைக்கவும். பாக்கிமுழுவதும் அனுப்பத்தவறுபவர்களுக்கு, 30—5—48-முதல் பத்திரிகை கண்டிப்பாக அனுப்பப் படமாட்டாதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மானேஜர்.
"திராவிட நாடு"

வைகாசி இதழ் வெளிவந்து விட்டது!

"புதுவாழ்வு"

க. அன்பழகன் எம். ஏ.

தனி இதழ் அணா நான்கு. ஆண்டுக் கட்டணம் ரூபா மூன்று, விற்பனையாளர்கள் எழுதுக.

நிர்வாகி
'புதுவாழ்வு'
10, வேளாளர் தெரு, புரசை,
சென்னை-7

திராவிட நாடு
காஞ்சி] 23—5—48 [ஞாயிறு

# பாலைவன மலர்

பாழ்பட்ட மனம் பாலைவனத்துக்குச் சமமாகும். பாலைவனத்திலே, பயிரேது, மலர் ஏது! பாழ்பட்ட மனதிலே, சிந்தனைக்கு இடமேது, உரிமை உணர்ச்சி ஏது! எழ முடியாது!

பாரததேவி ஆசிரியரின் கண்களிலே பாலைவன மலரொன்று தெரிந்தது—தூத்துக்குடி மகாநாட்டின்போது. கேலிக்குரியது என்ற எண்ணத்திலே, அவர், அவ்விதம் எழுதினார். நாம் அவருடைய கேலி கேட்டுக் கோபமடையவில்லை. ஏனெனில், அவர் கேலிக்குரியது என்று எந்தக் காட்சியைக் கருதினாரோ, அந்தக் காட்சியும் அதை ஒட்டியுள்ள கருத்தும், உண்மையாகவே இவ்வளவு பாழ்பட்டுக் கிடந்த திராவிட உள்ளத்தில், புதுமலர் பூத்திருக்கிறது என்ற உண்மையைக் காட்டுவதாகவே நமக்குத் தோன்றுகிறது.

பாலைவனத்து மலர்!—கேலிச் சொல் என்று எண்ணுகிறார், தேவி ஆசிரியர்—நாம், திராவிடத்தின் நிலை என்று அதைக் கொள்கிறோம்—களிக்கிறோம்—ஆசிரியரைச் சிந்திக்கும்படி கேட்டுக்கொள்கிறோம், பாலைவனத்திலேயே மலர் பூத்திடத் தொடங்கிவிட்டதே, முழு மறுமலர்ச்சி ஏற்பட்டுவிட்டால், எப்படி இருக்கும் என்பதைச் சற்று எண்ணிப் பாருங்கள்! திராவிடம், பூந்தோட்டமாக மாறும் காலம் பிறக்கிறது என்பதன் அறிகுறிதான், பாலைவனத்திலே மலர் பூத்திருக்கும் காட்சி.

ஆறு, பத்து, இருபது தலையுடையான், ஆயிரமுகமுடையான், அந்தப்புரத்திலே அறுபதினாயிரம் பேருடையான், அண்ணன் தம்பி மகனுடையான், சக்தி, குமாரி, குடும்புடையான் என்று கூறிக் கடவுளையே, மறைமுகமாக நிந்தித்து வந்தனர் ஓர் கூட்டத்தினர்.

இந்தப் பிரம்ம சொரூபத்தைப் பாருங்கள், இவர் பால் பழம் பத்து நாட்களுக்கொரு முறைதான் சாப்பிடுவார்; பக்கத்திலே பாம்பு வந்தாலும் பத்மாசனத்திலிருந்து எழுந்திருக்க மாட்டார்; பரமனின் திருக்கோலத்தைக் காணும் பாக்கியம் பெற்ற கண்கள் இவருக்கு; இவர் நாவிலே நான்முகனின் தேவியார் நடனமாடியவண்ணமிருப்பார்; இவருடைய கண்ணொளி விசேஷத்தால், காமதேனுவும், கற்பக விருட்சமும், வீட்டுப் புறக்கடை வந்துசேரும் என்றெல்லாம், ஜடைமுடி தரித்தவர்களைக் காட்டிக்கூறி, வீரரையும் வீணராக்கிய கூட்டம் ஒன்று ஆதிக்கம் செலுத்திவந்தது.

டார்ட்டாரி தேசத்துப் புரவிகள் மீதமர்ந்து, தகதகவென்னும் கவசம் பூண்டு பளபளக்கும் கட்கம் ஏந்தி, போர்க்குணம் படைத்த மக்கள் இங்கு புயலெனப் புகுந்தபோது, காய்ந்த புல்லைக்கையிலே பிடித்துக்கொண்டு, இந்தக் கூட்டம், என்ன செய்ய முடிந்தது! சாம்ராஜ்யங்கள் சரிந்தன! அரசுகள் கவிழ்ந்தன! வீரர்களின் குருதி மண்ணில் குழைந்தது! கட்டிய கோட்டைகள் தூளாகி, வெட்டிய அகழ்கள் தூர்ந்து, வேந்தர்கள் முடி இழந்து, வேற்றார், அரசுகள் அமைத்தனர். அப்போதெல்லாம் வேதியர்கள், செய்ததென்ன? வேள்விக் குண்டங்களிலே இருந்த வெப்ப ஜ்வாலை, மாற்றார்களை என்ன செய்ய முடிந்தது! துளி பயமின்றிச் சாமான்யத் தடிப்பிறந்தவர்களெல்லாம், தாயகத்தின் மீது பாயும் எதிரிகளைத் தாக்கி, பிணத்தீயிலே, குளித்தனர். காடுகளிலே கூடாரங்கள், மலைகளில் கோட்டைகள், குகைகளில் பாசறைகள் அமைத்துக்கொண்டு, கஷ்டப்பட்டனர். பின்னும் வாளை அவர்கள் சுழற்றிப் போரிட்டனர். அப்படிப் பட்ட வீரர்களையும், தியாகிகளையும், பரமனின் தாளில் பிறந்தவர்கள் என்று தகாத மொழிகூறி, அதனைப் பெரியதோர் தத்துவம் என்றுபேசி, அவர்களையே அந்த அபத்தத்தை நம்பும்படியும் செய்தனர்.

ஆண்டவனின் அருளைப்பெற்றவர்கள் என்று அர்ச்சிக்கிறீர், ஓர் ஆற்றலற்ற கூட்டத்தை; அவர்களிடம் மகிமை' இருப்பதாகப் பேசுகிறீர், என்ன மகிமையைக் கண்டீர்கள் அவர்களிடம்? காரியம் ஆற்றத் தெரியாதது ஓர் மகிமை! கபடம், ஒரு மகிமை! கட்டுக் கதைகளைக் கட்டிவிடுவது ஓர் மகிமை! காடுகளைப் பட்டணமாக்கியது நாம், இதிலே மகிமையில்லை, கடலிலே கலம் விடுவோம் நாம், அலையை அடக்குபவர் நாம், இதிலே மகிமையில்லை! நண்பர்கள் பிணமானது கண்டும் கலங்காது, கீர்த்திக் கணவாய் வழியாகச் சென்று எதிரிகளைத் தாக்கி வெற்றி கண்டது நாம், அதிலே மகிமையில்லை! பச்சை இலையைக் காட்டிப் பாமரரை மயக்குவது அவர்கள், அதிலே மகிமையிருக்கிறதாம், மகிமை, மஹா மகிமை! என்று கேட்கத் துணிவு கொண்டவீரன், வேத நிந்தகன், நீசன், சாஸ்திர விரோதி, சம்பிரதாயத்தின் வைரி, சனாதனத்தைக் கெடுப்பவன், சத்புருஷர்களின் சாபத்தைப் பெறப் போகிறவன், என்று தூற்றப்பட்ட காலம் இருந்தது.

புல்லேந்தியவர் முன்பு வில்லேந்திகள் வளைந்து நின்ற நாட்கள், இன்னும் இருந்திடல் வேண்டும் என்று எண்ணும், இனித்த வாயர்கள் சிலர் இன்னும் உள்ளனர்.

அவர்களின் பிரதிநிதிகளாகச் சிலர் கூடிக்கூவினர் சென்னையில் சின்னாட்களுக்கு முன்பு, 'முற்போக்கு பிராமணர்' என்ற பெயரில்!

உத்தமர் காந்தியார் உயிர் எந்த மத ஜாதிய வெறியால் பறிபோயிற்றோ, எந்த ஜாதிச்சனியன், டச்சுக்காரர்களையும் பிரெஞ்சுக்காரர்களையும், போர்ச்சுகல் நாட்டவரையும் பிரிட்டிஷாரையும் இங்கு குடிபுகுந்து கொடிகட்டி வாழச்செய்ததோ, எந்த ஜாதிபேதத்தால், சமுதாயம் சின்னாபின்னமாகி, மக்கள் பகைமையிலே மாச்சரியம் மூண்டதோ, எந்த ஜாதிச் சனியனைக் கண்டித்து விவேகானந்தரும் இராமலிங்கரும், விவேகம் படைத்த வேமனனும், வீரசைவ ஸ்ரீலரும், ராஜா ராம் மோகனரும், பிறரும், பேயும் போரிட்டும் சாய்ந்தனரோ, எந்த ஜாதிக்கொடுமையால், கிராமங்கள் கொடுமைக் கூடங்களாகவும், நகரங்கள் நடைநீச்சச் சாலைகளாகவும் மாறினவோ, எந்த ஜாதிச் சனியனால் கட்டிய கோயிலில் நுழையவோ, வெட்டிய குளத்தில் குளிக்கவோ, கோயிலைக் கட்டிக் குளத்தைவெட்டியவரும் உரிமை பெறமுடியாது போயினரோ, எந்த ஜாதிவெறி, மக்களுக்கு மிருக உணர்ச்சியை வளர்த்து நாட்டிலே காட்டுப் போக்கை உண்டாக்கிவைத்ததோ, அந்த ஜாதி முறை இருக்கத்தான் வேண்டும், அது



தேவைதான், என்று பேசினர் பார்ப்பனர்கள்!—

வகுப்புவாத நோய்க்கு மருந்து முறைகூறும் மேதைகள், இந்தப் பிதற்றலுக்கு, என்ன பதிலளித்தனர்! எப்படி அனுமதித்தனர், அறிவற்ற பேச்சை!

ஜாதிமுறை இருக்கவேண்டும் என்று ஒருமுப்புரிதரித்த சிறுமதியாளர் பேசினதை, மக்களாட்சியின் பெருநெறியைக் காப்பாற்றும் மாண்பு தமக்குண்டு என்று மார்தட்டிக்கூறும் கூட்டத்தினர், தட்டிக் கேட்டிருக்கலாகாதா! கேட்டனரா?

ஜாதிமுறையை ஒழித்து விடமுடியாது—கூடாது—அது தெய்வநீதி—என்று பேசினர். அறிவுக்குப் பொருந்தாதது, ஆணவம்நிறைந்தது, காந்தியாரின் கருத்துக்குத் துரோகம் இழைக்கும் காரியம் என்பது மட்டுமல்ல, அரசியல் சட்டதிட்டத்துக்கும் துரோகமான பேச்சல்லவா இது! கனல்கக்கிடுவோர் ஏன் மௌனமாயினர்! கண்டனச் சொற்கொண்டல்களின் திருவாய், என்னசெய்து கொண்டிருந்தது!

தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்று காந்தியாரின் திருமகனார், கருப்பர்—வெள்ளையர், என்ற பேச்சுப் பேசும் ஸ்மட்ஸ் துரைக்குச் சவுக்கடி தருகிறார்—சிறைப்படுகிறார்—இங்குள்ள இதழாசிரியர்களோ, ஜெனரல் ஸ்மட்ஸ் தங்கள் நிலைய வாயற்படியில் நிற்பது போலவே எண்ணிக்கொண்டு, ஆணவம் பிடித்தவனே! அறிவை இழந்தவனே! என்று கண்டித்து எழுதுகிறார்கள்; தலைநகரில், ஜாதிமதத்தின் பேரால் இருந்துவந்த பேதப்புத்தியை ஒழிக்க அரும்பாடுபட்ட அசோகரின் சின்னத்தைக் கொடியில் பொறித்துக்கொண்டு கோலோச்சும் தலைவர்கள் கண்முன்பாக, மடிசஞ்சிகளின் வாயிலேயும் வாமனிருந்த வடிகட்டின விஷ வார்த்தைகளைக் கொட்டினர், ஒரு கூட்டத்தினர். கேள்வி உண்டா, கேட்பார் உண்டா! ஜாம்ஜாமென நடந்ததே!!

நாள்தோறும் 'இந்து'விலே, கடிதம் வருகிறது, ஆசிரியருக்கு, திராவிடர் கழகம், துவேஷமூட்டுகிறது, வகுப்பு வாதத்தைப் பரப்புகிறது, அதைக் கலைத்தாக வேண்டும், பத்திரிகைகளைத் தடுத்தாக வேண்டும்; கழகத்தினரைச் சிறையிலே தள்ள வேண்டும், என்றெல்லாம், ஊராள்வோருக்கு உபதேசம் செய்யப்படுகிறது! ஊராள்வோர் அறிவார்கள், சிறைப்படுத்துவது என்று ஆரம்பித்தால், எவ்வளவு பெரிய கூட்டத்தைச் சிறைப்படுத்த வேண்டும் என்பதை. தூத்துக்குடி இதனைச் சர்க்காருக்குத் தெளிவாக்கி இருக்கும். எனவே அவர்கள், இந்த அவசர வாதிகளின் பேச்சுக்குச் செவி சாய்க்க மாட்டார்கள்; ஆகவே அதற்கல்ல இதுபற்றிக் கூறுவது, நியாயமான குறைபாடுகளையும் சமுதாய இழிவுகளையும் போக்குவதற்காகச் சமாதானமான முறையில் பிரசாரம் செய்துவரும் திராவிடர் கழகத்தைத் தடைசெய்துவிடத் தூண்டுகிறார்களே இந்த நேர்மையாளர்கள், விஷத்தைக் கக்கும் வகையிலும், விபரீத புத்தியுடனும், எந்த விவேகியும் கண்டிக்கும்வகையும் ஜாதிமுறை இருக்கவேண்டும் என்று பேசினரே, ஓர் மாநாடு கூட்டி. அத்தகைய போக்கைத் தடுக்க வேண்டுமென்று, ஏதேனும் சொல்ல முன்வந்தனரா? வருவரா!

ஜாதிமுறை இருக்கவேண்டும்—அதைக் கெடுக்கக்கூடாது—அதை ஒழிக்கவும் முடியாது—நாங்கள் புல்லேந்திகள் மட்டுமல்ல, வாளும் ஏந்துவோம், பூசுரர் போலப் போரிடுவோம் என்று செருக்கினரே, அவர்களின் அந்த எண்ணம், நடைமுறைத் திட்டமானால், சமுதாயம், என்ன நிலை அடையும், என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்கக் கூடாதா—சிந்திக்கும் சக்தியை சிதைத்துக் கொள்ளாதிருக்கும் சிலராவது! கமண்டலத்துக்குக் கிரீடம் பராக்குக் கூறவேண்டும்! ஆஸ்ரமத்தின் கட்டளையை அரண்மனை ஏற்று நடக்கவேண்டும். சேரிகளிலே, பழங்குடி மக்கள், தீண்டாதாராகச் சென்றுவிட வேண்டும். திறந்த கோயில்களை மூடிவிட வேண்டும். திருக்குளத்துப் படிக்கட்டுகளிலே திருப்பிரம்மன்கள், உட்கார்ந்துகொண்டு, வேதத்தின் உட்பொருளைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்க, மற்றவர்கள் காட்டில் விறகொடித்து, பழைய கஞ்சியின்றி நெஞ்சடையக் கல்லை உடைத்து, மூட்டை பல சுமந்து, முதுகெலும்பு முறியப்பாடுபட்டு, தேடிவந்த காசைக்கொண்டு தீபமேற்றி, தேனபிஷேகம் பொங்கல், தினம் படைத்து, தேய்ந்து, மாய்ந்துபோகவேண்டும்! ஜாதிமுறை ஒழியக் கூடாது என்று பேசினரே, புத்திசாலிகள், அவர்களுடைய முறைத் திட்டமானால், இதுபோன்றதோர் நிலைபிறக்கும், அறிவிழக்காத எவரேனும் இந்த நிலையைச் சகிக்க முடியுமா? நினைத்தாலே நெஞ்சு நோகும் பேச்சைத் தீரமாகப் பேசின கூட்டத்தைச் 'செல்லப்பிள்ளைகள்' என்று கருதும், 'மேதைகளை', நாம் எந்தப் பட்டியிலே சேர்ப்பது?

சண்டமாருத வேகத்தில், சனாதனத்தைக் காக்கும் எதிர்ப்புக்கு அஞ்சாது சபலத்துக்குக் கட்டுப்படாது சுயமரியாதைப் பிரசாரம் கடந்த முப்பதாண்டுகளாக நடைபெற்று, கைலாயவாசியைப்பற்றிக் கடையிலுள்ளோர் கேள்விகேட்டு, மகா பண்டிதர்களைத் திணறடிக்கும் அளவுக்கு; வைகுந்த வாசியைப்பற்றிய கேள்வியை விளையாடும் பருவத்திலுள்ள மாணவர்களும் கிளப்ப, ஆசிரியர்கள், பதில் கூறமுடியாது திண்டாடும் அளவுக்கும் பகுத்தறிவுப் பிரசாரம் நடைபெற்றுள்ள பிறகும், ஜாதிமுறை இருக்கத்தான் வேண்டும் என்று பேசச் சிலர் துணிகிறார்கள் என்றால், இந்தப் பிரசாரமே நடைபெறாமற் போயிருந்தால் நாட்டு நிலை, எப்படி இருந்திருக்கும். ஒன்றரை இலட்சம் மக்கள், தமிழகத்தின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிக்கு, வெப்பமிகுந்த நாட்களில், பிரயாணத் தொல்லை அதிகரித்துள்ள சமயத்தில், குடும்பம் குடும்பமாகச் சென்று மூன்று நாட்கள் கூடினர், என்றால், பிரசாரம், எந்த அளவுக்கு நடைபெற்று, பலனளித்திருக்கிறது, என்பது விளக்கமாகத் தெரிகிறதே. தெரிந்தும், அதேபோது, சிலர், ஜாதிமுறையை நீடிக்கச் செய்ய வேண்டும் என்று பேசுவதன் பொருள் என்ன? திராவிடர் கழகத்தின், திட்டந்தான் ஜாதி ஒழிப்பு, மற்றவர்கள் அதைக்கொண்டவர்களல்ல; எனவே திராவிடர் கழகத்தை நாத்திகக் கட்சி என்று நிந்தித்தோ, நாடாள்வோரை கழகத்தின்மீது மோதவிட்டோ, அடக்கிவிட்டால், கழகத்தைச்சேராத திராவிடர்கள், நாம் காட்டும் மார்க்கத்தைப் பின்பற்றுவார்கள் என்ற ஓர் 'பித்தக்குளி' கருத்து, புல்லேந்திகளுக்கு இருக்கிறது. இந்த எண்ணம் தவறு என்பதை நாட்டு நலனிலும் நாகரிக நிலையிலும் நல்லறிவிலும் நீதிநேர்மையிலும் நாட்டம் கொண்டவர் அனைவரும் திட்டமாகக் கூறவேண்டும்

நாடு விழித்துக் கொண்டிருக்கிறது என்பதை. நாணலை ஆயுதமாகக் கொண்டு நமது மூதாதையர் காலத்திலே நடமாடினார்களே, அதுஇன்று நடைபெறமுடியாது என்பதை, உலகறியக்கூறவேண்டும். ஜாதி ஒழிப்பு விஷயத்திலே, திராவிடர் கழகத்துக்கும் எங்களுக்கும் கருத்து வேறுபாடு ஏதும் கிடையாது என்பதை காங்கிரசிலுள்ள நாணயஸ்தர்கள் வெளிப்படையாகக் கூறவேண்டும், பாடுபடும் கூட்டத்தில் பிறந்து இன்று பாராளும் பண்பு பெற்ற முதலமைச்சர், சமரசவாதி என்கிறார்கள், காந்திய பக்தர் என்கிறார்கள், அவர் கூறவேண்டும், கொடுக்கிழந்த தேள்போல், பல்லிழந்த புலி போல், பார்வை இழந்த கழுகுபோல், உள்ள பழமையை, இனிப்புகுத்தி, ஜாதிமுறையை நிலைநாட்ட முடியும் என்று எண்ணுதீர் — ஏமாளிகளே! அவ்விதம் பேசி, அறிவாளிகளின் மனதைப் புண்ணுக்காதீர், அண்ணல் காந்ியாருக்குத் துரோகம் பிழைக்காதீர் என்றெல்லாம். குறள் கற்ற கல்வி மந்திரியார் கூறவேண்டும், தமிழகம் ஜாதியை ஏற்றுக்கொள்ளாது என்பதை. காமராஜர் கூறவேண்டும்; கடமை உணர்ச்சி கொண்டார் அனைவரும் கூறவேண்டும். ஒருமுறையேனும், ஒருமித்த கருத்து வெளியிடப்பட்டால், ஓலை தூக்கிகளின் காலம் முடிவடைந்துவிட்டது என்பது அவர்களுக்கே விளங்கிவிடும்—பிறகு அவர்கள் பரம சாதுக்களாகிவிடுவர்!

முப்பதாண்டுப் பிரசாரத்துக்குப் பிறகுதானே முப்புரியினர், "முதலியார்வாள்! நாயுடுகாரு! பிள்ளையவாள்! கோனாரவாள்! நாயகரவாள்! செட்டியாரவாள்!" என்று பேசத் தொடங்கினர். நமது பாட்டனாரும் தகப்பனாரும், "ஏண்டா முனுசாமி, ஏ, எதிராஜூ, வாடா கந்தா, எங்கே அந்த மாசி, கூப்பிடு சோணாசலத்தை" என்ற இந்த ரகப் பேச்சைத்தானே காதால் கேட்டார்கள்! நமது நாட்களிலேதானே நாம் நாகரீகமாக நடத்தப்படும் அளவுக்கு, நிலை உயர்ந்திருக்கிறது. இதற்கு உலைவைக்க முடியும், என்று உறுத்தார் சிலர் எண்ணும்போது, அழுத்தவருக்கு மட்டுந்தானா; மற்றவர்களுக்கும், ரோஷமான உணர்ச்சி கிளம்பாமல் இருக்குமா—கிளம்பாதிருக்காமா! திராவிடர்கழகம் மட்டுமல்ல, நாங்களும் ஜாதி முறைகூடாதென்று கூறுகிறோம் — இந்தஜாதிமுறையை ஒழித்துவிட்டுத்தான்மறுவேலைபார்ப்போம்,என்று உறுதியுடன், ஊரறியக் கூறவேண்டாமா? இதைத்தான், கேட்டனர்,தூத்துக்குடியில். சட்டசபையிலே இடம்கேட்கவில்லை-பதவியிலே பங்குகோரவில்லை—தேர்தலிலே தெருச் சண்டைக்கு வருகிறோம் என்று பேசவில்லை, ஜாதி ஒழியட்டும் சமுதாயம் சீராகட்டும்; பேதம் போகட்டும் தோழமை மலரட்டும், நாடுசெழிக்கட்டும்; நயவஞ்சகம்ஒழியட்டும், என்று கூறினர். தூத்துக்குடி மாநாடு, ஓர் தூது!—பாரத தேவிக்கு தூத்துக்குடி மாநாட்டில் பெரியாரின் பேச்சு, பாலைவனத்து மலர் போன்றிருக்கிறதாம். கேலிக்குக் கூறிய அந்த வாசகத்திலே புதைந்துள்ள முழு உண்மையை, தேவி ஆசிரியர் காணவில்லை—கண்டால் திகைப்பார்! பாலைவனத்திலேயே, மலர் பூக்க ஆரம்பித்துவிட்டது!! சிந்தனையற்றுக் கிடந்த நாட்டிலே, சிந்திக்கத் தொடங்கி விட்டனர்!! இதன் முழுப்பொருள், பக்கம் பக்கமாகக் காணலாம், பல்வேறு நாட்டு வரலாற்றுச் சுவடிகளில்! சிந்தனைச் செல்வத்தைப் பெற்றோம், அதை நாட்டுக்கு இனியும் வழங்குவோம், என்று, கூறினர் தூத்துக்குடியில்.

✲

## என் வாழ்வு

12-ம் பக்கத் தொடர்ச்சி

குத் தெரியாது. ஆகவே நான் தெரியப்படுத்துகிறேன்.

இந்த ஆசாமி, என்னுடன் பத்து வருஷகாலமாக சிநேகமாக இருந்து வந்தார்.

பிறகு, அனுவசியமாக என்னைக் கண்டபடி ஏசி, வெளியே சென்றதுடன், என்னை மிரட்டியும், என் குடும்பத்தை மிரட்டியும், பொய்க் கேஸ்கள் ஜோடித்தும், எங்களைப் பல வழிகளில் நாசமாக்கியதுடன், என் நகைகளை இரவல் கேட்டு வாங்கிக் கொண்டு போய், திருப்பித்தராமல், "வாயில் போட்டுக் கொண்டான்." இப்படிப்பட்ட மோசக்காரனுக்கு ஓட் போடுவது, மஹா பாபம். கோஹத்தி சிசுஹத்தி போன்ற பாதகமாகும்.

மகா ஜனங்களே! என் மீது இவ்வளவு ஆத்திரப்பட்டு, இவ்வளவு கொடுமையும் ஜெமீன்தார் செய்ததற்குக் காரணம் என்ன தெரியுமா? சொல்கிறேன் கேளுங்கள். எனக்கு எப்போதுமே காந்தி மகாத்மாவிடம் பக்தி உண்டு, ஒரு நாள், நான் ஒரு பெரிய, அழகான மகாத்மா காந்தி படம் வாங்கிவந்து, மாலையிட்டு, நடுக் கூடத்தில் தொங்கவிட்டிருந்தேன். ஜெமீன்தார், அந்தப் படத்தைக் கண்டதும், கடும் கோபம் கொண்டு, மகாத்மாவை, ஏதேதோ இழிவாக, சொல்லத் தகாத வார்த்தைகளைச் சொல்லி ஏசி, படத்தை எடுத்துவிடு, என்று கட்டளையிட்டார். நான் எவ்வளவோ தடுத்துப் பார்த்தேன் — கெஞ்சிப்பார்த்தேன்-முரட்டுப்பிடிவாதம் செய்தார். எனக்கும் கோபம் வந்துவிட்டது. நான், என் உயிர்போனாலும், மகாத்மாவின் படத்தைமட்டும் எடுக்கவிடமாட்டேன் என்று சொன்னேன்.

மகாஜனங்களே! அந்தப் பாவி, உடனே, என்னைப்பிடித்துக் கீழே தள்ளிவிட்டு, மகாத்மாவின் படத்தை எடுத்துக் கீழேபோட்டு, தூள் தூளாக உடைத்தான். இதுதான், எங்களுக்குள் விரோதம் உண்டான காரணம்.

மகாத்மாவின் படத்தை உடைத்த மகாபாபிக்கு மகாஜனங்கள் மறந்தும் ஒரு 'ஓட்டு' கூடத் தரக்கூடாது.

இப்படிக்கு,
தாசி கமலா.

கதர்க்கடை ஐயரின் இந்த காகிதக்குண்டு கண்டு, இளையபூபதி சந்தோஷத்தால் ஒரு துள்ளுத் துள்ளினார். இளையபூபதி இதை உரத்தகுரலில் படித்துக்கொண்டிருந்ததைக் கேட்டிக்கொண்டிருந்த, என் அக்கா, சரேலென வெளியே வந்து, இளையபூபதியைக் கும்பிட்டுவிட்டு, "இந்த நோட்டீஸ் போடப் போகிறீர்களா?" —என்று கேட்டாள். ஐயர் "ஆமாம்! கமலா! உன் கையெழுத்தையும் போட்டோ எடுத்து, இந்த நோட்டீஸ் ஒரு இருபதினாயிரம் போட்டு, ஊரெங்கும் வீசப்போகிறோம்—அழிந்தான் இதோடு" என்று கூறினார். என் அக்கா சாந்தமாக, ஆனால், உறுதியுடன்; "இதை நான் அனுமதிக்கமுடியாது. இதற்குச் சம்மதிக்கமுடியாது" என்று கூறினாள். அப்போது இளையபூபதி எங்களைப் பார்த்த பார்வை, அப்பப்பா, இப்போது எண்ணிக்கொண்டாலும் நடுக்கம் பிறக்கிறது; அவ்விதம் இருந்தது. அந்தப்பார்வை, எங்கள் குடும்பத்தைக் கெடுக்கும் நெருப்பைக் கக்கிற்று. (தொடரும்)



தொடர் கதை

கற்பனைச் சித்திரம்



[16—5—48 தொடர்ச்சி]

எப்போதும் ஸ்லாஸ்கோ மல்லும் சில்க்கு ஜிப்பாவும் போட்டுக் கொள்ளும் இளைய பூபதி, ஒருநாள் திடீரென்று, கதர் சட்டையும் துணியும் அணிந்து கொண்டு, கையிலே காந்திக் குல்லாய் எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தார். அவர் பின்னால் ரங்கன் ஒரு கைராட்டினமும் தூக்கிக்கொண்டு வந்தான். இது என்ன அதிசயம்? ஏன் இந்த வேடம்? என்றேன் நான். "அதிசயமுமில்லை, வேடமுமில்லை. இது புதிய போர்" என்றார் இளைய பூபதி.

"கேள் கண்ணே விமலா, நமது தேசம் வெள்ளைக்காரனிடம் அடிமைப்பட்டுக் கிடக்கிறது. அதனால் நாம் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றிப், படுக்கப் பாயின்றிப் பரதவிக்கிறோம். பாரதமாதா தலைவிரிகோலமாக நின்று அழுகிறாள். கையிலேயும் காலிலேயும் விலங்குகள் உள்ளன. அதை உடைத்து எறிந்து வெள்ளைக்காரனை மூட்டை முடிச்சுடன் ஓட்டிவிட்டு சுயராஜ்யம் பெறவேண்டும் என்று மகாத்மா காந்தி சொல்கிறார். ஆகையினால் காங்கிரசில் சேருங்கள் என்று கதர்க்கடை கைலாச அய்யர் சொன்னார். நான் காங்கிரசில் சேர்ந்துவிட்டேன்" என்று இளையபூபதி சொன்னார்.

"இது என்ன கோலம் துரையே. இது உங்களுக்கு ஏற்றதா? ராஜா போல் நீர் இருப்பதை விட்டுவிட்டு இந்தத் தொழில் எதற்கு? காங்கிரஸ் காங்கிரஸ் என்று கூப்பாடு போடுகிறார்கள், என்ன பலன் கிடைத்தது? ஏழை எளியவர்கள் முதுகில் போலீஸ் தடியடி விழுந்ததும், ஜெயிலுக்குப் பலர் போனதும்தானே மிச்சம். நீங்களாவது காங்கிரசில் சேருவதாவது. தடியடியும் ஜெயிலும் உங்களுக்கு ஏன்?" என்று நான் சொல்லித் தடுத்தேன்.

"அதற்குள்ளே, எங்கே என்னை அடித்து விடுகிறார்களோ, ஜெயிலுக்குப் பிடித்துக் கொண்டுபோய் விடுகிறார்களோ என்று பயமா? சுத்த பைத்தியம் நீ. தடியடி படவேண்டியவர்கள் பட்டாகிவிட்டது. ஜெயிலுக்குப் போகவேண்டியவர்களும் போயாகிவிட்டது. இனிமேல் அது கிடையாது. இருந்தாலும் எங்களைப் போன்றவர்கள் இனி அதிலே சேர்ந்துவிட்டு, அதுமாதிரி காரியம் வேண்டாம் என்று தடுத்து விடுவோம். இப்போ நடக்கவேண்டியது எலக்ஷன். அதிலே காங்கிரசுக்கும் ஜஸ்டிஸ் கட்சிக்கும் சண்டை. ஜஸ்டிஸ் கட்சியை ஒழித்து ஆயிரம் அடி ஆழத்திலே புதைக்கவேண்டும். அதற்காகத்தான் காந்தி குல்லாய்க்காரனுகி விட்டேன்" என்றார் பூபதி.

"ஜஸ்டிஸ் கட்சியைத் தொலைக்கிறதும் குழியிலே போடறதும் எதுக்கு? அதை நீங்கள் செய்வானேன்? இதுதானு உங்கள் வேலை?" என்று நான் கேட்டேன்.

"உனக்கு என்னடி தெரியும்? அந்த ஜெமீன்தார் ஜஸ்டிஸ் கட்சியாம். ஆகவே அவனிருக்கிற கட்சிக்கு விரோதமான கட்சியிலே நான் சேர்ந்துவிட்டேன். அவன் இருக்கிற கட்சியை ஒழிக்க வேண்டும். அப்பத்தானே அவனும் ஒழிவான். அதற்காகத்தான் நான் காங்கிரஸ். நாளைக் காலையிலேயே நமது வீட்டின் முன்புறம் கொடி ஏற்றப் போகிறேன், நீ ஒரு காந்திப் பாட்டு பாடவேண்டும். தெரிகிறதா" என்றார் பூபதி.

பைத்யம் இதிலே திரும்பிற்று? என்று நான் எண்ணினேன்.

இளையபூபதியின் அரசியல் பிரவேசம், வேகமான பல மாறுதல்களை உண்டாக்கிவிட்டது. ரவிவர்மா படங்கள் இருந்த இடத்திலே, தேசியத் தலைவர்களின்படங்கள்! தம்பூரா ஸ்ருதிச்சத்தம் நின்று விட்டு, ராட்டைச்சத்தம் கேட்கலாயிற்று! ரங்கன், கைராட்டை சுற்றுவான், இளையபூபதி, ஆடுராட்டே! ஆடுராட்டே! என்று வேடிக்கையாகப் பாடுவார். நான் எங்கே அவரைக் கேலி செய்கிறேனே என்று, அவராகவே, "ஏன்! என் போக்கு உனக்கு ஆச்சரியமாக இருக்கிறதா? பைத்யமே! ஆடுராட்டே! ஆடுராட்டே! என்றால், ராட்டினம் ஆடுவது என்றல்ல! அர்த்தம், போடு ஓட்டே! போடு ஓட்டே! என்று அர்த்தம். பெரியபெரிய தலைவர்கள், பேசி, கஷ்டப்பட்டு, சிறைப்பட்டு, ஜனங்களிடம் காங்கிரஸ் பக்தியை ஊட்டி வைத்திருக்கிறார்கள். நமக்கு அது இப்போது பயன்படுகிறது. ஓட் நமக்குத்தான்" என்று கூறினார்.

"ஓட்டு வாங்கும் வேலையிலே, ஈடுபட்டால்கூடத்தான் என்ன, நீங்கள் லேபேரர்பக்கம் எலக்ஷனுக்கு நிற்கக்கூடாதோ? எதற்காக, அந்தச் சனியனுடன் மோதிக்கொள்ள வேண்டும்?" என்று நான் கவலையுடன் கேட்டேன். இளையபூபதி சிரித்துவிட்டு, "அசட்டுப் பெண்ணே! அவன் தைரியம், சொன்னாலும், என்னை எதிர்க்கும் தைரியம் எந்தப்பயலுக்கு உண்டு? தலையிலே கொம்பு முளைத்தவன் எவன் வருகிறான் பார்ப்போம்; என்று முடுக்காகப் பேசினாலும். கதர்க்கடை ஐயர் சொன்னார். இவ்வளவு கர்வம்பிடித்தவனைத் தொலைக்கக் கட்டாயம் விடுவதில்லை. இதனாலே எதுபோனாலும் சரி எது வந்தாலும் சரி என்று தீர்மானித்து விட்டேன். மேலும் நானே காங்கிரஸ் கட்சி. என்னடி என்னைச்செய்ய முடியும். பார், வேடிக்கையை" என்று மிகவும் உற்சாகத்தோடு கூறினார். அன்றிரவு, போதைப்பானம் உட்கொள்ளும் போது, ரங்கனிடம் சொன்னார், "ரங்கா! இந்தக் காங்கிரஸ் சொல்கிற சகலவிஷயமும் எனக்குப் பிடித்தமாகத்தான் இருக்கிறது. ஆனா இந்தத் தேவாமிருதத்

தைச் சாப்பிடக்கூடாது என்று பேசுகிறார்களே, அது, எனக்குத் துளியும் பிடிக்கவில்லை" என்றார். ரங்கன், "அதுகளுக்கு, இதன் சுவை தெரியாது" என்று கூறிக் கேலிசெய்தான்.

அதுகள் இதுகள், என்று எங்கள் காங்கிரஸ்காரர்களை ரங்கன் கேலி செய்தானே, அவர்களிலே சிலர், மறுநாள் மாலை, என்வீட்டுக்கு வந்தனர்; கொடி ஏற்றுவிழா நடந்தது. நான், 'தாயின் மணிக்கொடி' பாடினேன், பலரும், புகழ்ந்தார்கள். கதர்க்கடை ஐயர் எழுதிக்கொடுத்திருந்தார் கொடியின் பெருமையைப்பற்றி. அதை, இளையபூபதி, கெம்பீரமாகப் படித்தார்—கொடியும் அழகாகப் பறந்தது. பலர், வீராவேசமாகப் பேசினார்கள், என்னையுமறியாமல் எனக்கோ ஓர்வகை மகிழ்ச்சி பிறந்தது. நானே ரங்கனை அனுப்பி, கதர்ப் புடவை வாங்கிவரச் சொன்னேன்—கொஞ்சம் முரட்டு நூல்தான்—என்றாலும் அதையே நான் அணிந்து கொண்டேன். இளைய பூபதிக்கு, கதர்ச்சில்க்கில் ஜிப்பாவும் உயர்தரமான கதர் வேட்டியும் இருந்தன. சில நாட்களிலே, எங்கள் வீடுதான் காங்கிரஸ் ஆபீஸ்.

எலக்ஷன் நாள் நெருங்கநெருங்க, எங்கள் வீடு, திருவிழாக் கோலமாகி விட்டது. ஒவ்வொருநாளும் பிரசங்கம், ஏதாவதோர் இடத்திலே—நான்தான் தேசியப்பாட்டுப்பாடுவது. சில ஊர்களிலே, இளையபூபதியைக் கேலிசெய்ய வேண்டுமென்பதற்காக உம்முடன் வருகிற பாட்டுப்பாடும் பேர்வழியார்? என்றுகூடக் கேள்வி கேட்டார்கள். இளைய பூபதியோ, விதரியமாகச் சொன்னார், "தாசி மைனா—எனக்குச் சிநேகிதை" என்று. அவர் அவ்வளவு தான் சொன்னார், மற்றப் பிரசங்கிகளோ, கேள்வி கேட்டவரின் சின்னபுத்தி, எனக்குள்ள சிறப்புகளை அவர்கள் அறியாது போனது, என்பனவற்றைப்பற்றிச் சரமாரியாகப் பேசுவர்.

மாலை வேளைகளிலே பிரசங்கம் என்றால் காலையிலே, 'ஓட்' போய் கேட்டுவிட்டு வந்த விஷயமாக விவாதம் நடைபெறும். எதிர்க்கட்சியின் போக்குகள் பற்றிய சர்ச்சைகள் அதிகமாக நடைபெறும். இளைய பூபதியிடம் பணம் பெறுவதற்காகப் பலர் பலவிதம் பேசுவார்கள்.

"சேட்டிக்களா, கந்தப்பன் செய்றதை" என்று ஆரம்பிப்பார் கதர்க் கடை ஐயர்; இளையபூபதி, கந்தப்பனை நோக்கி, "என்னடா கந்தா?" என்று இரண்டு மூன்று தடவைகள் கேட்டு, அவன் "ஒன்றுமில்லிங்க — சும்மாவுங்க — பிரமாதமாக ஒன்றுமில்லிங்க—என்று இழுத்திழுத்துப் பேசியான பிறகு, சொல்லுவான், "இறப்பூர் பக்கத்து மணியக்காரு, மீனாட்சிசுந்தரம் இருக்கிறாரே, அவரைச் சரிபடுத்தி விட்டேனுங்க. இனி அவர் நம்ம கட்சி" என்பான். அவன் கூறுவது போதாதென்று கதர்க்கடை ஐயர், அதே விஷயத்தை, வர்ணவேலைப் பாடுகளுடன் விவரிப்பார்.

"அந்த மணியக்காரனைத்தானே, உம்ம எதிரி, மலைபோல நம்பிக் கொண்டிருந்தான். உள்ளபடியே, மணியக்காரனுக்கு அந்தப் பக்கத்திலே, நல்ல செல்வாக்கு. பய, இரண்டு மூன்று கொலை செய்து கூட இருக்கான்—ஒரு சாட்சிகூடக் கிடைக்கலே, அவன் செல்வாக்காலே ஒரு ஆறுயிரத்துச் சொச்சம் ஓட்டுகளாவது, அந்தப் பக்கம் போயிருக்கும். நம்ம கந்தப்பன், பார்த்தா இப்படி பித்துக்குளிமாதிரி இருக்கான், ஆனா, எப்படியோ, மணியக்காரனை, மடக்கிச்சரிப்படுத்தி விட்டிருக்கான் — அவன் இப்போ, கிராமம் கிராமமாகப்போய், மஞ்சப் பெட்டி; மஞ்சப்பெட்டின்னு பேசுகிறானும்." என்று ஐயர் சொல்லி விட்டு, "கந்தா! என்னதான் செய்தே? சொல்லு!" என்று கேட்பார், அப்போதுதான், சூட்சமம் வெளிவரும், "ஒன்றுமில்லிங்க. மணியக்காரரு, ஜெமீன்தாரிடம் ஒரு ஆயிரத்து ஐந்நூறு கடன் வாங்கியிருக்கான். எனக்கு இது தெரியும். அதனாலே ஒருநாள், மணியக்காரரிடம் போயி, ஆழம் பார்த்தேன். மணியக்காரன் ரொம்ப ரோஷக்காரனுங்க. பார்த்தேன், ஒரு போடு போட்டேன். "மணியக்காரரே! நீங்க என்னமோ, ஜெமீன்தாரு, பழைய சிநேகமாச்சே, பரம்பரைப் பணக்காரராச்சே, நாலு நல்லது செய்தவராச்சேன்னு, அவருக்காகப் பாடுபடுறீங்க, ஆனா, அந்த ஆள், உங்களைக்குறித்து என்ன பேசுறான்னு தெரியுமா? மணியக்காரன், என்பக்கம் வேலை செய்யாமலிருக்க முடியுமா? கடன் பட்ட கழுதை, காலைக் கையைப் பிடித்துக் கொண்டு கிடடன்னு கூடச் செய்ய வேண்டியதுதானே, என்று சொல்லுகிறாரு"—என்று தூபம் போட்டேன். மணியக்காரனுக்கு பிரமாதமான கோபம் வந்துவிட்டது. "அடபாதகா! இப்படியா சொன்னான். என்னையா, கடன்பட்ட கழுதைன்னு சொன்னான். ஆகட்டும் அவனை ஒழிச்சுவிட்டு மறுவேலை பார்க்கிறேன். இந்தப் பக்கம் வரட்டும், ஓட்டுக்கேட்க!" என்றுகொக்கரித்தான். பிறகு, நான் சமாதானம் சொல்லி, "ஆத்திரப்பட்டு வெளியே ஒன் மணியக்காரரே கூவிடணும்! பொட்டியிலே, காட்டுங்களேன் உங்க வேலையை" என்று சொல்லி நம்ம கட்சிக்குத் திருப்பினேன். ஒப்புக் கொண்டாரு — குழந்தை மேலே கூடச் சாட்சி வைத்தாரு—நானும், அந்த ஆயிரத்து ஐந்நூறை வாங்கித் தந்துவிடுகிறேன், ஒரு பத்து நாள் போகட்டும்னு சொல்லிவிட்டு வந்தேன்" என்று விரிவாகக் கூறுவான். பிறகு, இளையபூபதியிடமிருந்து ஆயிரத்து ஐந்நூறு வெளியேறும்.

அவனைச் சரிப்படுத்தி விட்டேன், இவனுக்கு இன்னது தருவதாகச் சொன்னேன், என்ற செய்திகள் வந்த வண்ணமிருக்கும், இடையிடையே, ரங்கன், இன்ன ஆசாமியுடைய மண்டையைப் பிளந்துவிட்டான், என்று சேதி வந்தபடி இருக்கும். இளைய பூபதிக்கு இந்தச் செலவு வேறு!

இந்நிலையில், எலக்ஷனுக்கு ஒரு வாரம்இருக்கும்போது, கதர்க்கடை ஐயர், ஒரு குண்டு வீசினார்—எங்கள் குடும்பம் மீண்டும் கலகலத்துப் போனதற்குக் காரணம், அதுதான். "ஜெமீன்தார்வாள்! ஒழிந்துவிட்டான் உம்ம எதிரி! தொலைஞ்சான்! இனி வெளியே தலை நீட்ட முடியாது" என்று உற்சாகமாகக் கூறிக்கொண்டே, ஒரு காகிதத்தை இளையபூபதியிடம் கொடுத்தார். நான் பக்கத்தில் இருந்தேன். இருவரும் ஆவலுடன், அந்தக் காகிதத்தில் எழுதப்பட்டிருந்ததைப் படித்தோம்.

மோசக்காரன்
நம்பாதீர்

ஜெமீன்தாரர், ஊருக்குப்பெரியவர், உத்தமர், தருமப்பிரபு, என்றெல்லாம், பசப்பித் திரியும் பேர்வழி எலக்ஷனுக்கு நிற்கிறார். இவருடைய சுயரூபம், மகாஜனங்களுக்

(10-ம் பக்கம் பார்க்க)



சென்றவாரத் தொடர்ச்சி.

# பக்தனும் வெறுக்கும் பரமன் திருவிளையாடல்

:(o):

வரகுணபாண்டியன் ஒரு சமயம், சொக்கநாதரை நோக்கித், திருக்கைலாய தரிசனம்செய்ய விரும்புவதாக முறையிட்டதாகவும், உடனே சொக்கநாதர் மதுரைமாநகரத்தையே திருக்கைலாயமாக மாற்றிக் காட்டியதாகவும், இன்னொரு சமயம், காட்டிலுள்ள நரிகள் ஊளையிடுவதைக் கேட்டு, அவைகளுக்குத் துணிகள் கொடுத்தான் என்றும், தவளைகள் கத்துவதைக் கேட்டு, அவைகள் சிவநாமம் செபிப்பதாகக் கருதிப் பொன்னை வாரி இறைத்ததாகவும், வேறொரு சமயம், வேப்பம் வித்துக்கள் மரத்தடியில் பரந்து கிடந்ததைக் கண்டு, அவை எல்லாம் சிவலிங்கங்கள் என்று கருதி அந்த மரங்களுக்கு விதானங்கள் கட்டியதாகவும் கூறப்படுகிறது.

அரசியலில் சிலர், தங்கள் தலைவரைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுவதாகச் சொல்லுகிறார்களே, அதுபோலவே வரகுணபாண்டியனும் கடவுளியலில், அவரைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றும் ஒரு சிறந்த அன்பனாகவே இருந்தான் என்பது அவனுடைய வரலாற்றிலிருந்தும் அறியக் கிடக்கின்றது. என்ற போதிலும், அவன் தன்னுடைய சுயமரியாதையை மட்டும் விட்டுக் கொடுக்கவில்லை. பாணபத்திரரால் கூறப்பட்ட கடவுள் திருவிளையாடலை மன்னன் ஏற்கவுமில்லை — ஒப்புக்கொள்ளவுமில்லை. நரிகளின் ஊளையையும், தவளைகளின் கத்துதலையும் சிவநாம செபமாகவும், வேப்பங் கொட்டைகளைச் சிவலிங்கமாகவும் கருதுமளவுக்குக் கடவுட் பைத்தியம் கொண்டிருந்த ஒரு மன்னன், சொக்கநாதரே ஒரு விறகு தலையனாக வடிவந்தாங்கிவந்து ஏமநாதனைத் தோற்கடித்தார் என்று பாணபத்திரர் கூறியதை நம்பவில்லை. இது ஒரு சிக்கலான நிகழ்ச்சியாக இருக்கிறதே என்று சிலர் கருதக்கூடும். ஆனால், இதில் சிக்கல் எதுவும் இல்லை. இந்த மன்னன், அரசியலையும் கடவுளியலையும் ஒன்றாகப் பிணைக்கும் ஒழுங்கற்ற முறையைக் கையாளவில்லை என்பதே இதன் கருத்தாகும். கடவுட் பொறுத்த வரையில் இம்மன்னன் கண்ணை மூடிக் கொண்டு அவரைப்பின்பற்றி வந்தபோதிலும், அரசியலைப்பொறுத்த வரையில் கண்ணையும் கருத்தையும் திறந்தே அரசியல் நடவடிக்கைகளைக் கவனித்து வந்திருக்கிறான் என்று தெரிகிறது. கடவுள் விஷயத்தில் அவன் நடந்துகொண்ட முறை கண்மூடித்தனமான அறியாமை என்பதை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். நரி, தவளை ஆகியவற்றின் கத்துதல்களை சிவநாம செபமாகவும், வேப்பங்கொட்டைகளைச் சிவலிங்கமாகவும் கருதுமளவுக்கு அம்மன்னனுடைய அறிவு மங்கிக் கிடந்ததை அறிவுடைமையென்று ஆண்டவன்பர்கள் கூடக் கூறமாட்டார்கள்.

இனி, அந்த மன்னன் அரசியலை நடத்திய முறை உண்மையிலேயே பாராட்டக் கூடியதாகவே இருக்கிறது. வரகுண பாண்டியனுடைய அரசசபையில் யாழ்வல்ல புலவனாக வீற்றிருந்த பாணபத்திரரோடு போட்டி போட்டு யாழ்வாசிக்கவந்த வடநாட்டு ஏமநாதன் பாதியிரவிலேயே ஊரைவிட்டு ஓடிப்போகும் நிலைமை உண்டாக்கப்பட்டது; உண்மையாகவே அந்நாட்டு அரசியலுக்கே கேவலப்படுத்தும் ஒரு நிகழ்ச்சியாகும். ஒரு நாட்டு அரசாங்க வித்துவானோடு போட்டியிட வந்த இன்னொரு நாட்டவனை அந்நாட்டின் சபையாரும் ஆதரியாதும் ஊரை விட்டோடும்படி செய்ததனால் அந்நாட்டு அரசியலுக்கே ஒரு கேவலமாகும். அதுவுமன்றி, வடநாட்டிலிருந்து வந்த ஏமநாதன் மதுரையிலுள்ள சொக்கநாதக்கடவுளோடு போட்டியிட வரவில்லை. மன்னன் சபையில் யாழ்வல்ல புலவனாய் இருந்த பாணபத்திரரோடு தான் போட்டியிட வந்தான். பாணபத்திரரோடு போட்டியிட வந்த ஏமநாதனை வழிமறித்துச் சொக்கநாதக்கடவுள் அதில் தலையிட்டது மன்னனுக்குச் சினத்தையே உண்டாக்கிவிட்டது. யாழ் வாசிப்பதில் பாணபத்திரர், ஏமநாதனுக்கீடாக மாட்டார் என்பதையன்றோ சொக்கநாதர் நிலைநாட்டி விட்டார் என்று மன்னன் மேலும் சினங்கொண்டு, பாணபத்திரரைத் தன்னுடைய சபையினின்றும் விலக்கியதோடல்லாமல், அவருக்கு அதுவரைசெய்து வந்த உதவிகளையும் செய்யமறுத்து, அவரைச் சொக்கநாதரிடமே போயிருந்து அவருக்கே யாழ்வாசித்துக் கொண்டிருமென்றும் கூறிவிட்டான். தவளைகத்தினாலும், நரி ஊளையிட்டாலும், அவையெல்லாம் சிவநாம செபங்களெனக்கொள்ளும் அளவுக்குக் கடவுளிடத்து அன்பு கொண்டிருந்ததாகச் சொல்லப்படும் ஒரு மன்னன், பாணபத்திரர் விஷயத்தில் அந்தக்கடவுள் நடந்து கொண்ட முறையை வெறுத்தான் என்றால், அந்த மன்னன் தன்னுடைய நாட்டின் மதிப்பையும் புகழையும் காப்பாற்றுவதில் எவ்வளவு கண்ணுங் கருத்துமாக இருந்தான் என்பது நன்கு தெரிகிறது.

ஒரு அரசசபையில் நெடுங்காலமாக இருந்து, யாழ்வாசிப்பதில் அவருக்கு ஈடு யாருமிலையென்று பெயர் வாங்கிய ஒருவர், வடநாட்டில் இருந்து வந்த ஒருவனோடு யாழ் வாசித்து வெற்றிபெற முடியாமல், அவருக்குப் பதிலாகச் சிவனே ஒரு யாழ்வல்ல புலவனாக வடிவந்தாங்கி வந்து அவனை வென்றார் என்று கூறப்படும் நிகழ்ச்சி, பாணபத்திரருக்கும் புகழ் உண்டாக்குவதற்கு மாறாக அவருக்கு இழிவையே உண்டாக்கிய தென்பதோடு, அந்நாட்டுக்கும் அழிக்கமுடியாத கேவலத்தையும் உண்டாக்கி விட்டதென்று மன்னன் உண்மையாகவே உணர்ந்ததால் தான்; பாணபத்திரரைத் தம்முடைய சபையினின்றும் விலக்கினான். மக்கள்சாதாரணமாகச்செய்து முடிக்கக் கூடிய காரியங்களில் கூடக், கடவுள் காரணமின்றி—அவசியமின்றித் தலையீடுவதைக் கடவுளிடத்தில் அளவு கடந்த அன்பு கொண்டிருந்த மன்னன் கூட விரும்பவில்லை என்பதையே இந்நிகழ்ச்சி கண்ணாடிபோல் எடுத்துக் காட்டுகின்றது.

இனி, வரகுணபாண்டியனுடைய உதவி பாணபத்திரருக்குக் கிடையாது போகவே, அவர் வறுமையால் மெலிந்து வாடினார். தம்முடைய சந்நிதியில் பசியோடு வாடிக்கிடக்கும் பாணரின் நிலையைக்கண்டு சொக்கநாதர் அவர்பால் இரக்கங்

கொண்டார்; அவருக்கும் பொருளுதவி செய்யவேண்டுமென்று விரும்பினார். பாணபத்திரரின் அன்றாடச் செலவுக்கு வேண்டிய பொருளைச் சொக்கநாதர் கொடுத்து வந்தார். பாண்டியனால் வெறுக்கப்பட்டுத் தம்மையே தஞ்சமென்று வந்தடைந்த பாணனைத் தவிக்கவிடாது காப்பாற்ற வேண்டுமென்று தண்ணளிக் கடவுளாம் சொக்கநாதர் விரும்பினார். எனவே அவருக்கு உணவுக்குப் பணமும், உறையுளுக்குத் தம்முடைய கோயிலில் இடமும் ஒதுக்கிக்கொடுத்தார். இது, தஞ்சமென்றடைந்தோரைத் தயங்காது காக்கும் கடவுளின் கருணைத்திறத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு—கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டார் என்பதனை இந் நிகழ்ச்சி நன்கு தெளிவுபடுத்துகின்றது. படார்-விடப்படார்-கைவிடப்படார்—நம்பினோர் கைவிடப்படார்—கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்று கிந்தனார் கதையில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் கூறுவாரே, அது உண்மையென்பது பாணபத்திரரின் நிகழ்ச்சியால் நன்கு வலியுறுத்தப்பட்டுவிட்டது என்பன போன்ற எண்ண அலைகள், பாணரின் வரலாற்றைப் படிப்போரை மோதாமல் இருக்குமென்று எப்படிக் கூறமுடியும்?

இனிப், பாணபத்திரரின் செலவுக்குப் பணமும், அவர் இருப்பதற்கு இடவசதியும் சொக்கநாதரால் செய்துகொடுக்கப்பட்டன என்று கூறப்படுவதில், அவர் இருப்பதற்குரிய இடவசதியைத், தம்முடைய கோயிலின் ஒரு பகுதியில் செய்து கொடுத்தார் என்றால் அதனை யாரும் மறுப்பதற்கில்லை. பரமன் ஆலயங்கள், பாணர் ஒருவரல்ல, பலரும் [illegible] தங்கியிருக்கக்கூடிய அளவு பெரிதாகத்தான் கட்டப்பட்டுள்ளன. பரமன் படைப்பென்று சொல்லப்படும் மக்கள் பலர் குந்தக்குடிசையற்றிருந்தபோதிலும், பரமன் ஆலயங்கள் மட்டும், ஒரு ஊரில் பாதி இடத்தை அடைத்துக்கொண்டுதான் உள்ளன. தன்னுடைய உடம்பிலேயே பாதி உடம்பைப் பார்வதிக்களித்த 'தியாகமூர்த்தி'யான பரமன், தான் குடியிருப்பதற்கு மட்டும் இவ்வளவு பெரிய இடத்தை ஏன் விரும்பினார் என்பது தெரியவில்லை.

பரமன், பார்வதிக்குத் தம்முடைய உடம்பின் பகுதியைக் கொடுத்ததே, [illegible]

விடப்படார் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருந்தாலும் இருக்கலாம். பார்வதி, பரமனை நோக்கி, "என்னைக்கைவிடாதீர்" என்று வேண்டியிருக்கலாம். அதன்படி, அவர் அந்த அம்மையைக் கைவிடாது காப்பாற்றியும் இருக்கலாம். பார்வதி பெண்பாலாய் இருப்பதால், தனியாக இருந்தால் ஒருவேளை யாராவது அடித்துக்கொண்டு போய்விட்டால், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்ற பழமொழியும் பொய்யாவதோடு, பார்வதியைத் தாம் இழக்கும் நிலையும் ஏற்பட்டுவிடுமே என்று பரமன் கருதிப், பார்வதியை யாரும் பறித்துக்கொண்டு போகாதபடி, பாதி உடம்பை அந்த அம்மையாருக்கு உரியதாக்கியும் இருக்கலாம். இதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

ஒரு காலத்தில், அதாவது பிரமதேவனுக்கு ஐந்து தலைகள் இருந்த காலத்தில், அவன் பார்வதியைப் பார்த்து மோகம் கொண்டானென்றும், பார்வதியும், அவனுக்கு ஐந்து தலைகள் இருந்ததால், ஐந்து தலைகளையுடைய தன்னுடைய கணவன்தான் என்று தவறாகக் கருதி அவன்மீது காமுற்றதாகவும், இதனையறிந்த பரமன், பிரமனுடைய தலைகளில் ஒன்றைக்கிள்ளி எறிந்து, அந்தத் தொல்லையினின்றும் தப்பித்துக்கொண்டதாகவும் ஒரு நிகழ்ச்சி புராணங்களில் காணப்படுகின்றது. எனவே, பார்வதிக்குப் பரமன் தம்முடைய உடம்பில் பாதியைக் கொடுத்ததைத் தவறென்று யாரும் கூறமாட்டார்கள். இதுபோலவே, ஆலயங்களையும், அளவுகடந்த பெரிதாகவும், யாரும் எளிதில் உள்ளே நுழைந்துவிடமுடியாதபடி பலமான பாதுகாப்போடும் கட்டும்படிசெய்து, தன்னை நம்பினோரைப் பிறர்கவர்ந்து செல்லாத முறையிலும் அமைத்திருக்கலாம். இதனையும் நாம் தவறென்று கூறவில்லை. அதிலும், கடவுளைப் பொறுத்தவரையில், காரணமின்றி அவர்மீது குற்றஞ் சுமத்துவது முறையுமாகாது.

இனிப், பாணபத்திரருக்கு இருப்பதற்கு இடவசதி செய்துகொடுத்த சொக்கநாதர், அவர் செலவுக்குப் பணம் கொடுத்தார் என்று சொல்லப்படுகின்றதே! அவருக்குக்கொடுப்பதற்குச் சொக்கநாதரிடம் பணம் இருந்ததா என்று சிலர் கேட்கலாம். அவரிடம் பணம் மட்டுமல்ல, பட்டும், பவளமும், வைரமும், நவரத்தினமும் குவிந்துகிடக்கின்றன. ஆயிரம் பத்தாயிரம் மதிப்புள்ளவை அல்ல அவை. இலட்சக்கணக்கில் மதிப்பிடக்கூடிய அணிமணிகள் அவரிடம் இருந்தன—இருக்கின்றன. அப்படியானால் அதிலிருந்துதான் பாணபத்திரரின் செலவுக்கு வேண்டிய பொருளை அன்றாடம் கொடுத்திருப்பார் என்று கருதுவீர்கள். ஆனால், அவர் அவ்விதம் கொடுக்கவில்லை. எப்படிக்கொடுக்கமுடியும்? அப்படிக் கொடுத்தால், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதற்குப் பொருளே இல்லாமல் போய்விடுமே! சொக்கநாதர் வசம் குவிந்துகிடக்கும் பொருள்கள் எல்லாம், அவரைத் 'தஞ்சம்' என்று வந்து, அடைக்கலம் புகுந்த பொருள்களாயிற்றே! அப்படிப்பட்ட பொருள்களைப் பாணபத்திரருக்குக் கொடுத்தால், அவை சொக்கநாதரை நோக்கி, "கடவுளே! நீர் எங்களைக் கைவிடமாட்டீர் என்று நம்பி வந்து உம்மை அடைந்தோம்; நீர் இப்போது எங்களைக் கைவிடுகிறீர்; நாங்கள் பாணபத்திரரிடம் போனால், அவர் எங்களை என்னபாடு படுத்துவாரோ" என்று முறையிட்டு வேண்டிக்கொண்டால் என்ன செய்வதென்று கருதியதாலேயே, சொக்கநாதர் தம்மிடமுள்ள பொருள்கள் எதனையும் பாணபத்திரருக்குக் கொடுக்கவில்லை. அப்படியானால், பாணபத்திரருக்குக் கொடுத்த பொருள் சொக்கநாதருக்கு எப்படிக் கிடைத்தது? ஒருவேளை செங்கல்லையோ, மண்ணாங்கட்டியையோ பொன்னாக்கிக் கொடுத்திருக்கக்கூடும்—மண்ணையும் கல்லையும் பொன்னாக்கும் ஆற்றல் பெற்றவர் கடவுள்—சித்தருக்குச் செங்கல்லைப் பொன் கல்லாக்கிக் கொடுத்தவர்—பாணபத்திரருக்கும் அவ்விதமே செய்து கொடுத்திருப்பார் என்று நீங்கள் கருதக்கூடும். ஆனால், அதனையும் அவர் செய்யவில்லை. பின், எப்படித்தான் அவர் பாணபத்திரருக்குப் பொன் கொடுத்தார்? வரகுணபாண்டியனுடைய பணத்திலிருந்து கொடுத்தார். "இதுதானா? இதற்குத்தானா இவ்வளவு தொலைவு சுற்றி வளைத்து ஏதேதோ எழுதினாய்! ஒரே வரியில் எழுதிவிட்டிருக்கலாமே, வறுமையால் வாடிய பாணபத்திரருக்கு, அவருடைய வறுமையைப் போக்கத் திருவுளங்கொண்ட சொக்கநாதர், வரகுணபாண்டியனிடமிருந்து



பொன் பெற்று அவருக்குக்கொடுத்தார் என்று" [illegible] சிலர் கேட்கக்கூடும். ஆனால், சொக்கநாதர் அவ்விதமும் செய்யவில்லை. "என்னய்யா இது, வேடிக்கையாக இருக்கிறதே! வரகுணபாண்டியனுடைய பணத்திலிருந்து கொடுத்தார் என்று கூறுவதும், பின்னர் அதனை மறுப்பதும் எந்த வகையைச் சேர்ந்தது" என்றுகூடக் கேட்கத் தோன்றும் உங்களுக்கு. என்ன செய்வது? கதையின் போக்கு அப்படித்தான் இருக்கிறது. பாணருக்குக் கொடுக்கப்பட்ட பணம் என்னவோ பாண்டியனுடையது தான்; ஆனால், சொக்கநாதர் அந்தப் பணத்தைப் பாண்டியனிடமிருந்து பெறவில்லை. "பெறவில்லையென்றால், பாண்டியன் அந்தப் பணத்தை வேறு யார் வாயிலாகவாவது கொடுத்தனுப்பியிருப்பான்; பாண்டியன் அதனைச் சொக்கநாதரிடம் நேரில் கொடுக்கவில்லையென்பதற்காக, அதனைச் சொக்கநாதர் பாண்டியனிடமிருந்து பெறவில்லையென்று விதண்டாவாதம் பேசுவது" என்று கூடச்சில அன்பர்கள் என்மீது காய்ந்து விழுவர். அது மட்டுமல்ல, "அந்தப் பணத்தைச் சொக்கநாதர் பாண்டியனிடமிருந்து பெறவுமில்லை; அதனை வேறு யார் வாயிலாகவாவது கொடுத்தனுப்பவும் இல்லையென்றால், சொக்கநாதர் பாண்டியனுடைய பணத்தைத் திருடினாரா?" என்று கூடச் சில மெய்யன்பர்கள் கேட்டுச் சினப்பர். எனவே, யாருக்கு விடை கூறவிட்டாலும் இந்த 'மெய்யன்பர்கட்கு' மட்டும் உண்மையைக் கூறித்தான் ஆகவேண்டும். ஏனென்றால் அவர்களுடைய 'சாபம்' பொல்லாதது — அவர்கள் மனம் நொந்து ஏதாவது சொல்லிவிட்டால், அது அப்படியே நடக்கும் என்று புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது! ஆகையால் உண்மையைக் கூறுகிறேன். பாணபத்திரருக்குச் சொக்கநாதரால் கொடுக்கப்பட்ட பணம், பாண்டியனுடைய பண்டார (பொக்கிஷ) த்திலிருந்து சொக்கநாதரால் திருடப்பட்டது தான்.

இது, நாம் இட்டுக்கட்டிக் கூறுவதல்ல. பாணபத்திரர் வரலாற்றில் காணப்படும் உண்மை. பாண்டியனால் கைவிடப்பட்ட பாணருக்குப் பொருளுதவி செய்ய விரும்பிய சொக்கநாதர், பாண்டியனுடைய பண்டாரத்திலிருந்தே பணத்தைத் திருடிக் கொடுத்தார் என்றும், இந்தத் திருட்டுத் தொழிலை நடத்திக்கொண்டிருந்த சொக்கநாதருக்குச் சிலநாட்களுக்குள் ஒருவிதமான அச்சம் ஏற்பட்டுவிட்டதென்றும், அதாவது, பாண்டியனுடைய பண்டாரத்திலுள்ள பொருளை நாம் நாள்தோறும் திருடிக்கொண்டிருந்தால், பண்டாரத்தில் பணம் குறைந்துவிடுமென்றும், குறைந்துவிட்டால் பண்டாரத்துக்குக் காவலாக இருப்பவர்களை மன்னன் தண்டிப்பான் என்ற அச்சம் ஆண்டவனுக்கு ஏற்பட்டதென்றும், அதனால், அவர் பாண்டியனுடைய பண்டாரத்திலிருந்தும் பணத்தைத் திருடிப் பாணருக்குக் கொடுக்கும் திருப்பணியைவிட்டு விட்டார் என்றும் பாணபத்திரர் வரலாற்றில் காணப்படுகின்றது.

பரமன், தம்முடைய பக்தர்களின் மனம் நோகப்படாதென்பதற்காகத், திருட்டுத் தொழிலை மேற்கொண்டு கூட அவர்களைக்காப்பாற்றினார் என்றால், பரமன், பக்தர்கள்பால் கொண்டுள்ள அன்புப்பெருக்குத்தான் என்னே! என்னே! என்று எம்பிரானன்பர்கள் எண்ணி எண்ணி எக்களிப்புக் கொள்வர். ஆனால், இந்த எக்களிப்பில் அவர்கள் உண்மையை உணர மறந்துவிடுவர். "கடவுள், தம்முடைய அன்பர்களைக்காப்பாற்றுவதற்காகத் திருட்டுத் தொழிலை மேற்கொண்டார் என்று புராணங்களில் எழுதி வைத்தால், அதனைப் படிப்பவர்களுக்கும் அந்த எண்ணம் உண்டாகுமே! கடவுளே ஒருகாலத்தில், தம்முடைய பக்தனைக் காப்பாற்றுவதற்காகத் திருடி இருக்கிறார் என்றால், நம்மைப் பாதுகாப்பதற்கு நாமும் ஏன் திருடக்கூடாது" என்ற எண்ணம் உண்டாகுமே என்ற உண்மையினை அவர்கள் உணர மறந்துவிடுகிறார்கள். மறந்துவிடுவது மட்டுமல்ல, இத்தகைய நிகழ்ச்சிகளை எடுத்துக்கூறும் எம்போன்றோரையும் இழித்தும், பழித்தும் பேச முற்பட்டுவிடுகிறார்கள்.

"கடவுள் எல்லாம் வல்லவராயிற்றே! அவரால் விலக்கப்பட்ட—வெறுக்கப்பட்ட தீயபழக்கங்களில் ஒன்றான திருட்டுத் தொழிலை அவர் ஏன் மேற்கொள்ளவேண்டும்? அவர், பாணபத்திரரின் வறுமை நீங்க வேண்டுமென்று நினைத்தாலே, அவருடைய வறுமை நீங்கிக் குபேர சம்பத்துடையவராக விளங்குவாரே! குசேலருக்கு அருட்பேறு (பாக்கியம்) கிடைத்ததே! நம்முடைய சிவன் ஏன் இந்த விதமாக நடந்துகொண்டார்? இது எவ்வளவு கேவலமாக இருக்கிறது! கிருஷ்ணனைவிடச், சிவன் எவ்வளவோ மேலானவர் — சிறந்தவர் என்று பேசுகிறோமே! கிருஷ்ணன் குசேலரின் வறுமையைப் போக்கிய மாதிரி, நம்முடைய சிவனும் பாணபத்திரரின் வறுமையைப் போக்கியிருக்கலாமே! இது சிவனால் ஆகாத காரியமா?" என்ற முறையில் கூட நமது சைவமெய்யன்பர்கள் எண்ணிப்பார்ப்பதில்லை. திருவேடத்தையும் திருவிளையாடல்களில் ஒன்றாக எண்ணி மகிழ்கின்றனர்! திருட்டும் புரட்டும் எங்கள் கடவுளின் சிறப்புரிமை என்ற முறையில் புராண இதிகாசங்களை எழுதிவைப்பதும், பின்னர் அவற்றிற்குப் புனிதத் தன்மை கற்பிப்பதும் முறையா என்று கேட்பவர்கள் மீது நாத்திகப் பட்டத்தைச் சூட்டுவதும் நல்லறிவாளர் செயலாகாது. கடவுள் திருடினால், அதற்குத் 'திருவிளையாடல்' என்று பெயர் கொடுப்பதும், கஞ்சிக்கு வழியற்றவன் திருடினால், அவனைத் 'திருட்டுப்பயல்' என்று கூறுவதும் எந்த ஒழுங்கு முறையின்பாற் பட்டதோ, நாம் அறியோம். கடவுளைப் பொறுத்தவரையிலாவது, அவருக்குக் கற்பிக்கப்பட்டிருக்கும் புனிதத் தன்மைக் கேற்றவாறு புராண இதிகாசங்களைத் தொகுத்திருக்கக் கூடாதா? மக்கள்கூட மனத்தினால் நினைக்கவும் விரும்பாத மிக இழிவான காரியங்களை யெல்லாம் கடவுள் செய்ததாக எழுதி வைத்துவிட்டுப், பின்னர், பித்தளைக்குப் பொன் முலாம் பூசுவதுபோல், அச்செயல்களுக்கெல்லாம் 'திருவிளையாடல்' என்ற முலாம் பூசி, அவற்றை எல்லாம் மக்கள் புனிதமான செயல்களாகப் போற்ற வேண்டுமென்று கூறினால், ஒழுக்கத்தையும் நேர்மையையும் கடைப்பிடித்து ஒழுகவேண்டுமென்று கருதுபவர்கள், இச்செயல்களை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? கடவுளின் பேரால் உலகை ஏமாற்றிப்பிழைப்பவர்களுக்கு இவை ஏற்ற செயல்களாக இருக்கமுடியுமேயன்றிச், சிந்தனையாளரும் கண்ணியமாக வாழ வேண்டும்—அதுவே மக்கட் பண்புக்கு ஏற்றதென்று கருதும் மக்கள், அவற்றை ஒருபோதும் ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள். இதற்கு ஒரு மேற்கோள் காட்டுகிறேன்.

(16-ம் பக்கம் பார்க்க)

# தொழிலைக் கெடுக்கும் சமுகவாழ்வு

✲

தற்கால சமுதாய ஸ்தாபனங்கள் மக்களின் சமதர்மத்தை அழித்துத் தீங்கு விளைவிப்பனவாயிருக்கின்றன. ஜாதிப் பிரிவு, முறை, பாலிய விவாகம் கூட்டுக் குடும்ப நிர்வாக வழக்கம், தர்மத் திட்டம் முதலியவை யாவும் ஜனங்களின் சமுதாய முன்னேற்றத்திற்கும் தொழில் அபிவிருத்திக்கும் முட்டுக் கட்டையாயிருந்து வருகின்றன.

ஜாதி முறை, சமுதாயப் பிற்போக்கிற்கும், தொழில் மந்தத்திற்கும் பிரதான காரணமாயிருக்கிறது. ஜாதிக்கொள்கையில் ஒருவித கேவலமான இறுமாப்பு இருக்கிறது. அதனால் சிலர் பயனற்ற கர்வங் கொள்கிறார்கள். பலர் சிறுமையும் அதைரியமும் அடைகிறார்கள். ஆகவே இந்த வகைய நிலைமையில் உழைப்புக்குள்ள உண்மை மதிப்புப் போய்விடுகிறது. அதனால் மக்கள் தொழிலைத் தேடி வேலையில் அமருவதற்கு அவசியமாகும் ஊக்கத்தை இழந்து விடுகிறார்கள். அது காரணமாகப் பிரதான தொழில்களில் பெரும்பாலானவை கீழ்த்தர வகுப்பார் எனப்படுவோரிடம் விடப்பட்டுப்போகின்றன. அவர்களுக்கு அத்தகைய தொழில்களை நடத்துவதற்குப் போதிய கல்வி இருப்பதில்லை. பொது ஜனங்களும் அப்படிப்பட்ட தொழில்களுக்கு ஆதரவளிப்பதில்லை. அவைகளை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. ஆதலால் அநேக கைத்தொழில்கள் பல்லாயிர வருஷங்களுக்கு முன்பு எந்த நிலையில் இருந்தனவோ, அதே நிலைமையில்தான் இன்னும் இருந்து வருகின்றன. மற்றத் தேசங்களிலோ அதே தொழில்கள் மிகச் சிறந்த அற்புத முறைகளில் அபிவிருத்தியடைந்திருக்கின்றன. பிறநாடுகளில் ரசாயனக்காரர்களும், சிற்பிகளும், வர்த்தகத்துறை விற்பன்னர்களும் தொழில்களை மேற்கொண்டு நடத்தி வருகிறார்கள், அவர்கள் கல்வி விஞ்ஞான சாதனங்களாலும், அதிநூதன முறைகளாலும் தொழில்களை வியக்கத்தக்க முறையில் அபிவிருத்தி செய்து வருகிறார்கள்.

இந்தியாவின் கைத் தொழில் தாழ்ச்சிக்குக் கூட்டுக்குடும்ப வாழ்க்கையும் ஒரு காரணமாக இருந்திருக்கிறது. விவாகத்திற்குப்பிறகும் அநேகர் தங்கள் பெற்றோர்களுடனும் கூட்டாக ஒரே குடும்பத்தில் இருந்து குடும்பப் பொதுச் செலவில் வாழ்க்கை நடத்துகிறார்கள். அதனால் ஏதோ நன்மை உண்டு என்றாலும், தற்கால சமுதாய நிலைமைகளில் அதன் தீமை அதிகப்படலாயிற்று. அதனால் கைத் தொழில் அபிவிருத்திக்குச் சேதம் உண்டாகிறது. கூட்டுக் குடும்பங்களில் சம்பாதியம் செய்கிறவர்களுக்குப் பொருள் சேர்க்க வேண்டுமென்ற ஆசை மிகக் குறைந்து போகிறது. அவர்களைச் சார்ந்து காலந்தள்ளும் மற்றவர்களிடம் சோம்பலும் பிறர் சொல்வதைக் கேட்டு நடக்கும் சுதந்திரமற்ற தன்மையும் வளர்ந்து வருகின்றன. அவர்கள் எதையும் வழிகாட்டியாக முன்னின்று நடத்த விரும்புவதில்லை.

மத ஸ்தாபனங்களில் நடைபெற்று வரும் தர்ம கைங்கரிய முறைகளால் ஜனங்களில் அநேகரிடம் சோம்பல் வளருவதற்கு இடமேற்பட்டு விடுகிறது. அத்தகைய தர்ம ஸ்தாபனங்களின் சிறந்த நோக்கமும் பரோபகாரக் கொள்கையும் பெரிதும் பாராட்டத் தக்கவைதான். ஜன சமூகமும் சர்க்காரும் அத்தகைய தர்ம நிர்வாகங்களை ஏற்றுக் கொள்ளாத வரையில் அவைகளால் நல்லபலனேற்படாது.

ஆனால் தற்கால தர்ம ஸ்தாபனங்கள் தப்பு வழிகளில் உபயோகிக்கப்படுகின்றன. மதத்தின் பெயரைச் சொல்லித் திடகாத்திரமுள்ளவர்கள் இலாபமடைகிறார்கள். ஜனங்களின் [illegible] ஏமாந்த தன்மையாலும் சோம்பலுள்ளவர்களே, நன்மையடைகிறார்கள். உண்மையில் தேவைப்பட்ட அநேகர் அவதிப்பட்டிருக்கிறார்கள்.

தற்காலத்தில் தொழிலின் திறமை மக்களின் மனோசக்தியைப் பொறுத்திருக்கிறது. தொழிலபிவிருத்தி மக்களின் தேர்ச்சி, தந்திரம், ஞான யுக்தி ஆகியவைகளுக்கு ஏற்றவாறு சிறப்படைகிறது. பண்டைக் காலத்தில் இந்தியா தொழில் துறையில் மிகப் பெரிய பெயர் பெற்றிருந்தது. அக்காலத்தில் அக்ஷர கணிதம், க்ஷேத்திர கணிதம், வான சாஸ்திரம், அநுபவ விஞ்ஞானம் முதலியவைகளின் உதவியால் இந்திய தேசத்தில் கைத்தொழில் நல்ல நிலையில் இருந்து வந்தது. ஆனால் தேசத்திற்குப் பற்பல துன்பங்கள் நேரிட்டு வந்தன; பகைவர் படையெடுப்புகள், எதிரிகளின் வெற்றி, அந்நியர் ஆட்சி முதலியவைகளால் இந்தியர் அறிவின்பலத்தையும், ஒழுக்கத்தின் உயர்வையும் இழக்க நேர்ந்தது. கைத்தொழில்களில் தங்களுடைய முழுத் திறமையையும் காட்டி அநுகூலமடைவதற்கான நல்ல நிலைமை இந்தியர்களுக்கு வெகுகாலமாக இல்லையென்றே சொல்லலாம். இந்தியர்களின் தொழில் நிலை, தொழில் நிலையில் உயர்ந்த வேறெந்த தேசத்தோடும் வைத்து ஒத்துப் பார்க்க லாயக்கற்றதாக இருக்கிறது.

தவிரவும் இந்தியர் உணவில் போஷணை சத்து மிகவும் குறைவு. இப்படிப்பட்ட வறுமை காரணங்களாலும் இந்தியக் கைத்தொழில் முன்னேற முடிவதில்லை.

பட்டினியைப் போலவே காலரா, அம்மை, விஷஜுரம், எலும்புருக்கி முதலிய நோய்களும் மக்களின் தேகபலத்தைக் குறைத்துக்கொண்டிருக்கின்றன. ஆகவே ஆரோக்கியம், திடகாத்திரம் மிகுந்த பேரறிஞர்கள் கடும் போட்டி போட்டுக்கொண்டு நிற்கும் தொழில் உலகில் உண்ண உணவின்றிப் பிணியாளராய் அழிந்து நிற்கும் ஒரு ஜன சமூகம் அத்தொழில் துறையில் வெற்றி பெறுமென எதிர்பார்க்க முடியுமா?

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press, Thirukkachinambi Street, Conjeevaram.